879
2·18

ஓம்.

# சாவித்திரி.

ஒரு தமிழ் நாடகம்.

21 JUN 1918
MADRAS

இரண்டாம் பதிப்பு.

சதாவதானம்

## தெ. கிருஷ்ணசாமிப் பாவலர்

அவர்கள் எழுதியது.

சென்னை, திருவல்லிக்கேணி

ஆர். வெங்கடாசலம் கம்பெனியார்,

வெளியிட்டது.

சர்வசுதந்தரம் பெற்றது.] [விலை அணா 8.

21 JUN 1918
MADRAS

# முகவுரை.

இச்சாவித்திரி நாடகத்தினைப் பலர் பலவிதமாக எழுதியிருந்தும், இதனையே முதனூற் கருத்துக்கு முரணாகாதபடி எழுதி முடிக்கவேண்டும் என்று எனக்குள் எழுந்த பேரவாவால், இதனை ஒருவாறு எழுதிமுடித்தேன். இப்பதிப்பில் இடை யிடையே பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவை சமயத்திற் கேற்ற ராக அமைப்புடன் இருத்தல் அறிந்து, நடிப்போர் அவற்றையே அவ்வவ்விடங்களில் பாடுதல் நலமாகும். நாடக அமைப்பையும் நாடகமேடை அமைப்பையும் எண்ணி எழுதியது இது ஆதலின், இதனை நடித்துக்காட்ட விரும்புவோர் இடையே எதையும்விடாமல் அனுயாசமாய் நடிக்கலாம்.

எமது உத்தரவை முதலிற் பெற்றாலன்றி, இதனை எவரும் நடித்துக் காட்டல் ஆகாது.

தெ. கிருஷ்ணசாமிப்பாவலர்,
5. உலகப்பமேஸ்திரிவீதி, சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை.

ஓம்:

# சாவித்திரி.

## நாடக பாத்திரங்கள்.

0-,2MKPS
MV

| | |
|---|---|
| நாரதர் | ஓர் தேவ இருடி |
| எமதருமன் | அறக்கடவுள் |
| சித்திராகுப்தன் | எமதருமனின் கணக்கன் |
| அஸ்வபதி | மத்ராபுரி அரசன் |
| தியுமத்சேனன் | சாலுவதேசாதிபதி |
| சத்தியவான் | தியுமத்சேனன் மகன் |
| காலவன் | ஓர் சேனுதிபதி |
| சாரளன் | சத்தியவானின் தோழன் |
| மாளவி | அஸ்வபதியின் மனைவி |
| சத்தியவதி | தியுமத்சேனனின்மனைவி |
| சாவித்திரி | அஸ்வபதியின்மகள் |
| சந்திரிகை | சாவித்திரியின்தோழி |

மந்திரி, எமதூதர், குடிகள், தோழிகள், முதலானோர்.

### கதை நிகழிடம்.

மத்திராபுரி, சாலுவதேசம், அவற்றை யடுத்த காடு, எமலோகமுமாம்.

21 JUN 1918
...RAS.

# சாவித்திரி.

## முதலங்கம் - முதற்காட்சி.

களம் : ஸ்யனக்ருஹம்—காலம் : இரவு.

[சாவித்திரி பஞ்சணையிற் படுத்துக் கனவுகாண்கிருள். சந்திரிகை அவளருகிலிருந்து விசிறி, அவள் வாய் பிதற்றுவதைக் கண்டு அதிசயிக்கிருள்.]

சா—என்ன பிராணநாதா, இதற்குள் போகவேண்டுமோ?

சங்—என்ன! பிராணநாதாவாமே! இன்னும் விவாகமே முடியவில்லை, இதற்குள் என் தலைவி பிராணநாதனைச் சம்பாதித்துக் கொண்டதாகப்பேசுகிருள்! ஒருவேளை என்னையும் அறியாமல், இரகசியமாகப் பிராணநாதனைச் சம்பாதித்துக்கொண்டாளோ?

சா—இது தானே, வாரும் பிராணநாதா என்ருல்—

சங்—சரி சரி, பிராணநாதன் இருக்கும்போது, நான் எதற்காக இங்கு இருக்கவேண்டும்? நான் போகவேண்டியது தான்.

சா—(எழுந்துபோம் ஒருவனைத் தடுத்தல் போல) வேண்டாம், பிராணநாதா. (தடுக்கிருள்.)

சங்—அம்மா! அம்மா!!

சா—(சந்திரிகையைப் பார்த்து) (1) ஆ! பிராணநாதா, போகாதிர். (அவள் கரத்தைப் பற்றுகிருள்)

சங்—நான் பிராணநாதர் அல்ல அம்மா, சந்திரிகை.

சா—ஆ!—சந்திரிகா, இவ்விடத்தில் ஒருவரும் வரவில்லையா?

சங்—இவ்விடத்திலா?

சா—ஆம், சொல்லடி என்றாள்—

சங்—என்ன அம்மா, இவ்விடத்திலாவது ஒருவர் வருவதா வது, எங்களை அறியாமல்? அஃதிருக்கட்டும், யார் வந்ததாகக் கேட்கிறீர்?

சா—ஆனால், ஒருவரும் இவ்விடத்தில் வரவில்லை?—சந் திரிகா, நான் என்ன உறக்கத்திலா இருந்தேன் இவ் வளவு நேரம்?

சங்—ஆம். இந்நேர வரையில் தூங்கிக்கொண்டே, யாரு டனே பேசிக்கொண்டிருந்தீர்.

சா—ஆஹா! என்ன கனவு!

சங்—அம்மா, எல்லாம் எனக்குத் தெரியும். நான் ஏன் இங்கு இருக்கவேண்டும் இனி? நான் வருகிறேன்.

சா—என்னடி சந்திரிகா, இஃதெல்லாம்?

சங்—இல்லை, பிராணநாதரைத் தேடிக்கொண்ட பிறகு நான் ஏன் இருக்கவேண்டும்? அதற்காக உத்தரவு கேட்டேன்!

சா—சந்திரிகா, இந்த விளையாட்டெல்லாம் வேண்டாம் என்று நான் சொல்லவில்லையா?

சங்—விளையாடல் அல்ல அம்மா. உண்மை இது.

சா—(தனக்குள்) ஆ ஹா! என்ன அழகு!

சங்—பார்த்திரா? அதைத் தான் சொல்லினேன்.

சா—சந்திரிகா, விளையாடாதே. உன்னிடம் ஒளிப்பா னேன் இதை? சொல்கிறேன் கேள்.

சங்—தாம் சொல்ல வேண்டாம் அம்மா, எதையும்.

சா—ஏன்?

சங்—எல்லாம் எனக்குத் தெரியும் முன்னமே.

சா—என்ன தெரியும், சொல் கேட்போம்.

ங்ச—எதைச் சொல்வது ? பிராணநாதர் விஷயந்தானே ?

சா—சந்திரிகா, நான் என் என்று சொல்வேன், என் கனவில் வந்து காட்சி தந்த கட்டழகன் பெருமையை ! ஐயோ ! ஏனோ பாவி நான் விழித்துக்கொண்டேன் ! ஏ விழிப்பென்னும் பகைவனே, நான் உனக்கு என்ன தீங்கிழைத்தேன் ! அந்தோ ! அப்படியே எழுந்திராமல் இருந்தால், இன்னும் என் காதலர் முகத்தைக் கண்ணாரப் பார்த்த வண்ணமே, அவருடன் களிப்பாய் இருப்பேனே !—சந்திரிகா, அவரை நான் மறுபடியும் எப்போதடி காண்பேன் ?

சங்—யாரை ?

சா—என் காதலரை ?

சங்—காதலரை ! என்ன அம்மா, யாரையோ கனவில் கண்டதாகச் சொன்னீர் ; இதற்குள் காதலர் என்கிறீரே !

சா—ஆம் ; சந்திரிகா—அவரையே என் மனம் மணாளராக எண்ணிவிட்டது. மணந்தால், மண்ணில் அம்மகிபனையே மணப்பேன். இல்லாவிடின், இப்படியே கன்னிகையாய்க் காலங் கழிப்பேன்

சங்—இது என்ன அம்மா பைத்தியம் உமக்கு ? யாரோ கனவில் வந்தாராம். அவரையே மணம் கொள்ள வேண்டுமாம் ? இது எப்படி முடியும் ?

சா—ஏன் முடியாமல் ?

சங்—ஏன் முடியாமலா ! முதலில் உமது கனவில் வந்த புருஷர் யார் என்று எப்படி அறிவது ?

சா—அவர் அழகிற் சிறந்து விளங்கினரே ? அன்றியும், வீரமும் தீரமும் அவர் முகத்தில் விலாசம் செய்து கொண்டிருந்தனவே ?

சங்—இருந்தால்? அவற்றைக்கொண்டு, அவரைநாம் இன்னார் என்று அறிய முடியுமா?

சா—முடியாதா?— (2) சந்திரிகா, அவரைப் பார்த்தால் இராஜ வம்சத்தில் உதித்தவர் போல் தோன்றியதே?

சங்—கனவில் தானே தோன்றியது?

சா—அப்படியா!—ஆனல் அவரை நான் அடைய ஒரு மார்க்கமும் இல்லையா? சந்திரிகா, ஒரு மார்க்கமும் இல்லையா!

சங்—என்ன மார்க்கம் இருக்கிறது?—ஆம், நான் ஒருவழி சொல்கிறேன்—இராஜவம்சம் என்று சொல்கிறீர்?

சா—ஆம், உயர்ந்த க்ஷத்திரிய குலத்தில் உதித்தவர் போல் தோன்றினர்.

சங்—அப்படியா? ஆனல், நான் எல்லாத்தேசத்து அரசகுமாரர்களின் படங்களையும் கொண்டுவருகிறேன். அவற்றைப் பார்த்து உமது கனவில் வந்தவரைக் கண்டு பிடியுங்கள்.

சா—ஆம், ஆம், சந்திரிகா. (3) நல்ல யோசனை. போய்ச் சீக்கிரம் கொண்டுவா.

[சந்திரிகை போகிருள்.]

ஆ ஆ! என்ன தர்பாக்கியவதி நான்! நான் விழித்துக்கொள்ளாமல் இருந்தால், இன்னும் அச் சுந்தர புருடருடன் பேசிக்கொண்டே இருப்பேனே! அவர் என் பக்கலில் இருந்தது, எவ்வளவோ எனக்கு ஆனந்தமாக இருந்தது! என்ன தேஜஸ்! என்ன வசிகரம்!—ஆ! மீட்டும் அவரை நான் காண்பேனே!— (4)

[சந்திரிகை படங்களைக் கொண்டு வருகிருள்.]

சந்திரிகா, கொண்டுவந்தனேயா படங்களை ?

சங்—இதோ கொண்டுவந்தேன் அம்மா—இந்தப்படத்தைப் பாரும். இவர் தான் கர்னுடக ராஜ குமாரர். என்ன அழகு பார்த்தீரா ?

சா—ஆம், நீ தான் மெச்சவேண்டும் இந்தக் கோரனே. அப்புறம் ?

சங்—கோரமா ? சரி—இந்தப் படத்தைப் பாரும். இவனுக்கு மிஞ்சிய அழகுடைய புருஷனே உலகில் இல்லை.

சா—அப்படியா ? அகோர புருஷன் என்று சொல்.

சங்—அகோரமா ? உம், இந்த மாளவதேச இராஜ குமாரனைப் பாரும். அழகன் தான்; ஆனல் காது கொஞ்சம் செவிடு.

சா—சீபோ—ஏனடி, செவிடன் படத்தையும் குருடன் படத்தையுமா என்னிடம் காட்டவந்தாய் ?

சங்—இல்லை, இல்லை அம்மா—இதோ இந்தப் பாண்டிய மன்னன் புதல்வன் படத்தைப் பாரும். மஹாசூரன், மன்மதனைத் தோற்கடிக்கும் அழகன்.

சா—சந்திரிகா, உன்னை இவற்றை எல்லாம் யார் கேட்டது; பேசாமல், படங்களைக் காட்டிக்கொண்டே போகாமல் ?

சங்—அப்படியே அம்மா. (படங்களைக் காட்டுகிருள்.)

சா— சந்திரிகா, நில், நில்— (5) இது யாருடைய படம்!

சங்—ஏன் ? இவரா தம்முடைய கனவில் வந்தவர் ?

சா— ஆம் சந்திரிகா. (6) பார்த்தனேயா இவருடைய பரந்தகன்ற மார்பை! அடி, இவர் அழகிய தோளைக் கண்ட எந்தப் பெண்தான், இவர்மேல் இச்சைகொள்ளாள் ? ஆஹா, என்ன விசாலம் பொருந்திய கண்கள்!

சந்—சரிதான், இப்படியே வர்ணித்துக்கொண்டு போங்கள்.

சா—அடி, என்னால் முடியுமா இப்பேரழகர் பெருமையை வர்ணிக்க?

சந்—அஃதிருக்கட்டும் அம்மா. இவரைத் தாம் இதற்கு முன் எப்போதாவது கண்டிருக்கிறீரா?

சா—அதை ஏன் கேட்கிறாய்?

சந்—இல்லை, நனவில் கண்டபொருள்தானே கனவில் வரும் என்று கேட்டேன்.

சா—ஆம் ஆம்—நான் இவரை இதற்குமுன் பார்த்ததாக ஞாபகம் இல்லையே—சந்திரிகா, அஃதிருக்கட்டும்; இவர் யார்சொல்.

சந்—இவர் இன்னார் என்று எனக்குத் தெரியவில்லையே. யார் இவர்! இவரை நான் என்றும் பார்த்ததில்லை.

சா—சந்திரிகா, என் தந்தைக்குத்தெரியும் ஒருவேளை. அவரைக் கேட்டுப் பார்ப்போமா?

சந்—அவருக்கு மாத்திரம் எப்படி தெரியும்? அரசர்கள் பெயர் தான் தெரியும். அப்படி இருந்தாலும், எல்லா அரச குமாரர்களையுமா அவர் பார்த்திருப்பார்?

சா—இல்லை, இல்லை; நான் அவரைப் போய்க் கேட்கிறேன். எப்படியும் இவரை நான் மணாளராகப் பெறுவேன் என்று எனக்குத் தோற்றுகிறது. வா, நாம் தந்தையிடம் போவோம்.

சந்—ஆமாம், அவரும் தமக்குத் தெரியாதென்று சொல்லிவிட்டால்?

சா—சொல்லிவிட்டால் என்ன? அதைப் பிறகு யோசிப்போம். நீ வா.

[இருவரும் போகிறார்கள்.]

21 JUN 1918

# முதலங்கம் - இரண்டாங் காட்சி.

களம் : காடு—காலம் : பிற்பகல்.

[சாரளன் ஓர் பெருந்தடியால் ஒரு எலியை அடித்துக் கொண்டே வருகிருன். மற்ருேர் புறமாய், சாரளன் கூச்சலைக் கேட்டுச் சத்தியவான் ஓடிவருகிருன்.]

சார—விடாதே, அடி அடி. ஓடிப்போவுது, ஓடிப்போவுது.

சத்—(மற்ருேர் புறமாய் வந்து) என்ன! என்ன! ஏன் நகைக்கிருய்? சாரளா, என்ன சமாச்சாரம்?

சார—(சிரித்துக்கொண்டே) இருங்க கொஞ்சம் சிரிச்சுட்டு வறேன்.

சத்—என்ன!

சா—இல்லே, இருங்க இருங்க, கொஞ்சம் சிரிச்சுட்டு வறேன்.

சத்—சாரளா, சொல்கிருயா என்ன நீ?.

சா—அப்புறங் கோவிச்சிக்குவிங்கோ. ஐயோ சாமி (சிரிக்கிருன்.)

சத்—சொல்லமாட்டாய் நீ?

சார—இல்லே, நாமிங்கே இன்னுத்துக்கு வந்தோம்?

சத்—அதை ஏன் கேட்கிருய்?

சார—அதைச் சொல்லுங்க முன்னே. பிறகு நான் சொல்றேன்.

சத்—கண்ணிழந்த என் பெற்ருேர்களுக்கு வேண்டிய கனிவர்க்கங்களைப் பறித்துப்போக வந்தோம். அதைப் பற்றி என்ன?

சார—ஊம் ஊம். பொய் சொல்லாதிங்கோ. இன்னும் எதுக்கு வந்தோம்?

சா—எதற்கு வந்தோம்?—ஆம், முனிவர்கள் அனைவரும், தங்கள் தவத்திற்கு வனமிருகங்கள் தடையாய் உள்ளன என்று கூற, அவற்றை வேட்டையாடலாம் என்றும் வந்தேன்.

சார—இப்போ சரி. அப்படி சொன்னால்தானே. ஆமாம், வேட்டையாட வந்தோமே, நீங்க எத்தன மிருகங்களே கொன்னிங்க.

சத்—ஒன்றையும் நான் கொல்லவில்லை.

சார—ஏன்? இருங்க கொஞ்சமா சிரிச்சுட்டு கேக்கிறேன்.

சத்—விளையாடுகிறாயா, என்ன?

சார—இல்ல இல்லே சொல்லுங்க, ஏன்கொல்லலே?

சத்—தீய மிருகங்கள் என்கண்முன் வரவில்லையே. நேற்றுத் தான் இந்நாடாளும் மன்னன் வேட்டையாடிச் சென்றானும். அங்ஙனமாக, எனக்கெப்படி இன்று வேட்டை கிடைக்கும்? அஃதிருக்கட்டும், நீ ஏன் ஓ என்று கூவினை?

சார—நான் கூவினதே சொல்றேன். அப்போ நீங்க ஒன்னையும் கொல்லலே?

சத்—ஒன்றையும் நான் கொல்லவில்லை.

சார—சே! இவ்வளதானு? நானு பார்த்திங்கிளா, ஒரு பெரிய பெரிய பெரிய பெரிய மிருகத்தே கொன்னுதீத்துட்டேன்.

சத்—நீயா? எப்போது?

சார—இப்போதான். என்ன என்ன என்னு எண்ணிட்டிங்க?

சத்—அப்படியா ! நீ கொன்றதென்ன புலியா ?

சார—ஊஹம் ஊஹம்.

சத்—சிங்கமா ?

சார—இன்னும் பெரிசி.

சா—இன்னும் பெரிதா ?—யானேயா ?

சார—இல்லா, இல்லா. இதோ பாருங்கோ.

சத்—எதோ ?—ஒன்றையும் காணுமே ?

சார—இதோ எலி !

சத்—எலி ! எலியையா கொன்ருய் போயும் போயும் ? கெட்டிக்காரன் நீ ! பாவம், அந்த எலியை என் கொன்ருய் சாரளா !

சார—பாவமா ! நான் கொன்னு பாவம். நீங்க கொன்னு மாத்திரம் புண்ணியமா ?

சத்—சாரளா, அதோ யார் ஓடிவருவது பார் !

[காலவன் ஓடி வருகிருன்.]

கால—இதோ இருக்கிருன் ! (7) அடே, அகப்பட்டனேயா என்கையில் ?

சத்—யார் இவன் !—அப்பா, நீ யார் ? என்னே அவமரியாதையாகப் பேசவேண்டிய காரணம் என்ன ?

கால—அடே அசட்டுப் பையலே, உன்னேடென்ன நான் பேசுவது ? உன்னேக் கொல்ல வந்திருக்கிறேன் நான்.

சத்—என்னே ? அப்பா, இதற்குமுன் என்னே அறிவாயா நீ ?

கால—எல்லாம் அறிவேன் ; வா.

சத்—அறிவாய் என்னே ! அஃதிருக்கட்டும், நான் உனக்கு என்ன தீங்கிழைத்தேன் என்று என்னே நீ கொல்லப் போகிருய் ?

சத்—அடே, நீ என்ன பேசினும், உன் பேச்சால் மயங்குபவன் நான் அல்ல என எண்ணிக்கொள். எனக்கு நேரமாகிறது.

சார—(சத்தியவானிடம்) பயமாருக்குது. நான்போவுட்டுமா?

கால —என்னடா தூரத்திலேயே நிற்கிறாய்? அருகில் வருகிறாயா, அல்லது—

சத்—அப்பா, வார்த்தையை அதிகமாய்க் கொட்டாதே. நான் உனக்கு ஒரு தீமையும் செய்யாதிருக்கும் போது, நீ என்னை அவமதிப்பது நியாயமாகுமா? (8)

கால—அடே, என்ன சொல்லினை? வாளும் கையுமாய் இருப்பதாகக் கெர்வம் கொள்கிறாயோ?

சத்—அப்பா, நான் சொல்வதைக் கேள். எங்களுக்கும் உனக்கும் ஏதேனும் பகை உண்டோ? அங்ஙனமாக நான் ஏன் உன்னைப் பகைக்க வேண்டும்?

கால—அடே, எப்போது என்னைக் காக்கும் மன்னருக்கு எதிரிகள் ஆயினீரோ, அப்போதே எனக்கும் எதிரிகள் தான் நீங்கள்.

சத்—அதுவரையில், உன்னை நான் உண்மையான ஊழியன் என மதித்தேன். பேசாமல் போ.

கால—போகவா? நீயா என்னைப்போ என்றும் வா என்றும் சொல்பவன்?

சத்—ஆனால், நீ என் உயிரைக் கொண்டுதான் போகப் போகிறாயோ?

கால—ஆம், நேரமாகிறது.

சத்—ஆம்! அப்பா, என்னுயிரைக் கொண்டு போக இவ்வுலகில் எவனும் சமர்த்தன் அல்லன். ஆயினும், நீ உண்மையான ஊழியனாய் இருப்பதால், என் உயிரை

உனக்காக உவப்புடன் கொடுப்பேன். எனினும், இவ்வுடல் என் பொருட்டல்ல நிலை பெற்றுள்ளது. முதுமைப் பருவம் அடைந்து, நலமிழந்து, கண்ணிழந்து, காட்டில் வசிக்கும், என் அருமைத் தாய் தந்தையர்க்கென ஆய்விட்டது. இனி, உனக்குத் தர நான் உரியவன் அல்ல; காப்பதற்கே கடமைப் பட்டவன்.

கால—என்ன பொறுமை!—ஆ! இளவரசே! உமக்கு இக் கதியும் வரவேண்டுமா! பாவி நான் என்ன வேலை செய்ய இருந்தேன்! அரசே, இக்கொடியனை உடனே உங்கள் கை வாளால் கொன்றுவிடுங்கள்! கொன்று விடுங்கள்! எவ்வண்ணம் எல்லாம் இகழ்ந்தேன் தங்களை!

சத்—அப்பா, ஏன் வருந்துகிறாய்? சென்றதைக்கருதாதே.

கால—அரசே, தங்களைக் கொல்ல எண்ணிய அப்பாதகன் கஜகேதுவை நானே கொன்று வருகிறேன் பாரும். பாவி அவன் தங்கள் ராஜ்யத்தைக் கைப் பற்றிக்கொண்டதோடு அமையால் தங்களையும் கொல்லத் துணிந்தான் அன்றோ? பார்க்கின்றேன் அவனை.

[செல்கிறான்]

சத்—உம், உலகம் பலவிதம். ஆம், 'இன்சொலாலன்றி இருநீர் வியனுலகம்,வன்சொலாலென்றும் மகிழா'து.

சார—ஆ ஹா! அதோ மானு! மானு!

சத்— எதோ! எதோ!—ஆம் ஆம், ஓடிவா.—

[ஓடுகிறான்]

சார—அடடா! ஓடவைச்சேனே! இப்போ யார் கூட ஓடறது?

(போகிறான்)

# முதலங்கம் — மூன்றுங்காட்சி

களம் : நந்தவனம் — காலம் : மாலை.

சத்—எங்கே இன்னும் சாரளன் வரவில்லை? அவனை என்னுடன் வாஎன்று அப்போதே சொல்லியதாக, ஞாபகம் இருக்கிறது. எங்கே போயிருப்பான் அவன்? ஒருவேளை எனக்கு முன்னதாக ஆஸ்ரமத்தை அணுகி இருப்பானே? நான் நினைக்கவில்லை. நான் அம்மானைத்துறத்திக் கொண்டு எவ்வளவோ வேகமாக ஓடிவந்திருக்கிறேன். நல்லது, அவன் எப்படியும் இவ்வழி வருவான். அதுவரை இவ்விடத்தில் இருந்து, என் இளைப்பைத் தவிர்த்துக் கொள்கிறேன்—மனோரம்மியமாக இருக்கிறது இப்பொழில்! (உட்கார்ந்து) (ஏ) ஆ! சில்லெனக் காற்று வீசி என் ஆயாசத்தைப் போக்குவதற்கு ஈதே ஏற்றஇடம். [படுத்து, அப்படியே உறங்கிவிடுகிறான்.]

[சாவித்திரியும் சந்திரிகையும் வருகிறார்கள்.]

சா—சந்திரிகா, இன்னும் எத்தனை நாளடி செல்லும், போன பிராமணர்கள் திரும்பிவர?

சந்—என்ன அவசரம் அம்மா உமக்கு? அதற்கென்று போனவர்கள் ஊரூராய்த் திரியவேண்டாமா?

சா—உம், கூலிவேலை செய்பவர்களுக்கு, அவ்வளவு பற்று ஏன் ஏற்படப்போகிறது? நான் அப்போதே என் தந்தையைக் கேட்டேன்; நான் போய்த் தேடி வருகிறேன் என்று. அவர் ஒரே பிடிவாதமாக, வேண்டாம் என்று மறுத்து விட்டார்.

சங்—பின் என்ன அம்மா? தாம் போகலாமா? அதற்காகத் தான் அவர் பிராமணர்களை அனுப்பினர்.

சங்—நன்முய் அனுப்பினர். உம், வா நாம் பூசையை முடித்துக் கொண்டு சீக்கிரம் போவோம்.

சங்—இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி பூசை செய்யப் போகிறீர், அம்மா?

சா—ஏன், உனக்கென்ன கஷ்டம் அதில்? உனக்குக் கஷ் டமாய் இருந்தால், நீ அரண்மனை போய்ச் சேர்.

சங்—எனக்கென்ன கஷ்டம் அம்மா? இன்னும் மாலைப் பொழுதாக வில்லையே, இதற்குள் என்ன பூசை என் றேன். மற்றென்ன?

சா—சந்திரன் தோன்ற வில்லையா இன்னும்?

சங்—பொழுதுகூடத் தெரியவில்லை உங்களுக்கு? ஏனம்மா, எனக்கொரு சந்தேகம். தாம் அஷ்டமி தோறும், சந்திரனைப் பூசிப்பது எதற்காகஅம்மா?

சா—போடி, (10) என்னை ஏளனம் செய்கிமுயா என்ன?

சங்—இல்லை அம்மா. தெரியாததால் கேட்டேன்

சா—இதுகூடத் தெரியாதா? எருவிட்டிறைஞ்சுதல் எதற் காகத்தான் ஏற்பட்டது?

சங்—ஓ! கன்னிப்பெண்கள் தமக்கு விரைவில் மணமுடிய வேண்டும் என்று செய்கிறுர்களே, ஒருபூசை; அது தானே இது?

சா—ஆம் அதுதான்.

சங்—என்னவோ அம்மா, ஏதாவது பிரயோஜனம் இருந் தால் எவ்வளவு கஷ்டம் வேண்டுமானுலும் படலாம்.

சா—சந்திரிகா, ஒன்றும் வீண்போகாது பார். அப்படி வீண்போகுமானல் முயற்சி திருவினையாகும் என்று ஆன்ருேர் சொல்வார்களா?—சந்திரிகா, என்மனம் இன்று, என்றும் நானடைந்திராத சந்தோஷத்தைக் காட்டுகிறதே! அது ஏனடி? ஒருவேளை சென்ற பிராமணர்கள் திரும்பி வந்திருப்பார்களோ ?

சந்—என்ன அம்மா! இதற்குள் வந்துவிடுவார்களோ அவர்கள்? அது எப்படி முடியும்?

சா—வேறு என்ன காரணம் இருக்கும் சந்திரிகா, என் மனம் இவ்வளவு சந்தோஷமடைய?

சந்—காரணம் என்ன? இந்நேரம் வெயிலில் வந்தீரே, இங்குக் குளிர்ச்சியாய் இருப்பதால் அப்படி தோற்றுகிறது. வேறென்ன இருக்கப் போகிறது?

சா—ஆம், நீ சொல்வதும் உண்மைதான்—பார்த்தனையா இச்சோலையை! சந்திரிகா, இது என்றும் இல்லாத வண்ணம் இப்படி புஷ்பித்து விளங்குகிறதே!— ஆஹா, இத்தகைய இடத்தில்—

சந்—என்ன அம்மா, அப்படியே துண்டாய் விட்டுவிட்டீரே? உம், எல்லோரும் சுயநலத்தைத்தான் கோருவார்கள். நான் இருக்கிறேன் என்றும் கவனித்தீரா? இத்தகைய இடத்தில் உமது காதலருடன் களித்திருப்பதைத்தானே வேண்டுகிறீர்?

சா—சந்திரிகா, நான் கவலையினீங்கினுல், அதுவே உனக்கு இன்பம் அல்லவா?

சந்—ஆம் ஆம். நான் விளையாட்டாக அப்படி சொல்லினேன் அம்மா.

சா—என்னடி இன்னும் நிலவு புறப்படவில்லையே?—ஆஹா! சந்திரிகா, அதோ அம்மயில் என்ன அழகாகத் தன் சித்திரக் கலாபங்களை விரித்து ஆடுகிறது பார். (11)

சந்—ஆம் அம்மா, என்ன நேர்த்தியாக ஆடுகிறது. அம்மா, இன்னும் இச்சோலை முழுவதையும் சுற்றிப் பார்த்து வரலாமா? இன்னும்தான் நேரம் இருக்கிறதே?

சா—நீ போய்வா. நான் இங்குத்தான் இருக்கிறேன்.

சந்—உம், நான் கூப்பிட்டால் வருவீரா? கூப்பிடுகிறவர் கூப்பிட்டால் போவீர்.

சா—போடி, உனக்கு எந்நேரமும் இதே வேலைதான்.

சந்—இதோ போகிறேன் அம்மா. இவ்விடத்திலேயே இருக்கிறீரா நான் வருகிறேன்?

சா—இருக்கிறேன், நீபோ.

[சந்திரிகை செல்கிருள்.]

அ, சந்திரிகா இப்படிவா (வர) அவ்விடத்தில் நல்ல மலர்கள் இருந்தால், அவற்றை மாலையாகக் கட்டிக் கொண்டு வருகிருயா?

சந்—இதற்குள் ஏனம்மா மாலை?

சா—சீ, மாலை வேண்டும் என்ருல், நீ எண்ணியபடி செய்யத்தானே? பூசைக்கு உதவும் என்று சொன்னேன்.

சந்—அதைத்தான் நானும் கேட்டேன். பதி பூசை செய்யத்தானே?

சா—இதுதானே உன்னிடம்?

சந்—இல்லை, இல்லை; கோபித்துக் கொள்ளாதீர். அப்படியே கொண்டு வருகிறேன். [போகிருள்.]

சா—ஆஹா!—அம்பிகே! கௌரி! இந்த நறுமணச் சோலையில் நான் தனித்து, மனக்கவலே உறுவது உன் தண்ணருட்கு அழகாமோ! தாக்ஷாயணி! தாபதர் புகழும் தயாபரி! யான் உனது மகள் அன்றோ? நீ எனக்கு வாய்த்த தாயல்லவோ! ஈஸ்வரி! மஹேஸ்வரி! என்னை இவ்வண்ணம் எல்லாம் நீயே பரிதபிக்கச் செய்தால், என்னைக் காப்பவர்தான் யார் இவ்வுலகில்! அம்மா! யான், (12) இம்மனோஹரமான சோலையில், என்மனதுக்கினிய மணாளருடன் சரச வார்த்தைகள் ஆடக்கொடுத்து வையாத பாவியோ! நாதா என்று நான் அழைக்கவும், கண்ணே என்று அவர் என்னை முத்தமிடவும், இத்தகைய இடத்தில் நான் கொடுத்து வைத்தவளாயின் அதைவிட, நான் இவ்வுலகில் அடைய வேண்டிய பேறு வேறு என்ன இருக்கிறது! உம், அந்தப் பெரும் பாக்கியத்தை அடைய (திரும்பிச் சத்தியவானுள்ள இடத்தைப் பார்த்து)—ஆ!—காண்பது கனவோ! அல்லது நனவோ! அல்ல, நான் விழித்துக் கொண்டன்றோ இருக்கிறேன். இதோ மரத்தின் கிளைகள் அசைவதையும், பக்ஷிகள் பறந்து செல்வதையும் பார்க்கிறேனே! இவர், அன்று நான் கனவில் மணந்தகாதலர் அன்றோ! அம்மா! அம்பிகா! என் கற்பைக் காப்பாய் இத்தினம்! காரிகை என் மனம் இக்கட்டழகரை நாட வேண்டிய காரணம் என்ன! கருத்தில் மணந்த காதலரே இவர்! ஆம்! அவரே இவர்! இரு பார்ப்போம். (படத்தையும் சத்தியவானையும் பார்த்து) ஆம் ஆம்! இவரே அவர். ஆஹா! மஹாதேவி! நின்மகளாம் என் கற்பைக்காத்த உன் மலரடியை வாயார வாழ்த்துகிறேன்—ஆ! இன்றல்லவோ நான் பிறந்ததன் பெரும்பயனை அடைந்தேன்! என்கண்ணையும் கருத்தை

யும் கொள்ளைகொண்ட காதலர், இதோ படுத்துறங்குகிருரே. இனி எனக்கென்ன குறை? கும்பிடப்போனதெய்வம் குறுக்கே வந்ததுபோல, இவர் எனக்கு அனுயசமாய்க் காட்சி தரவந்தாரே. பிராணநாதா! மண்ணிற்ருனே தமது அருமைத் திருமேனிதோய உறங்கவேண்டும்! அன்று கனவில் காட்சிதந்ததாம், இன்று நனவிலும் ஏழையாளுக்குக் காட்சிதர இவ்விடம் வந்தீரோ? என்ன அயர்ந்து உறங்குகிருர்! பிராணநாதா, அன்று என்னுடன் கனவில் வார்த்தையாடிக் களிப்பூட்டியதுபோல, இன்று உறக்கம் ஒழிந்து, என்னுடன்பேசி, என்மனதை சந்தோஷப்படுத்தும்—அதிக நித்திரையில் இருக்கிருரே. எழுப்பட்டுமா இவரை? எப்படி நான் எழுப்புவேன்? அருகிற் செல்லவே நாணமாய் இருக்கிறது—இதை எல்லாம் எண்ணினல் என் எண்ணம் பூர்த்தியாகாது. (அருகிற்சென்று) ஐயோ! வெட்கமாய் இருக்கிறதே!—ஆம், நான் உரத்துப் பாடுகிறேன். அதைக் கேட்டாவது எழுந்திருப்பார்.

[பாடிக்கொண்டே புஷ்பங் கொய்பவள்போல நிற்கிருள். (13) சத்தியவான் அதைக்கேட்ட வண்ணம் எழுந்திருக்கிருன்.]

சத்—ஆ! என்ன இனிமை!—யார்அது பாடுவது! (எழுந்து) தேவரும் கேட்டிரார் இக்கீதத்தை! (சாவித்திரியைப் பார்த்து) ஆஹா இம்மங்கையாவள்!—இவள் எவ்வுலக மங்கையோ அறியேன்! என்ன வனப்புடையாள்! இவள் முகத்தழகைப் பெறவோ, எவரும் போற்றும் அச்சந்திரன், வானில் தலைகீழாகத் தவம் செய்கிருன்! ஆஹா! அம்மதியைப் பழிக்கும் இந்த ரதியின் வதனத்தைப் பார்த்திருந்தாலும் போதுமே.

என்ன வனப்பு! (14) என்ன வடிவம்! இவள் ரூபலா வண்ணியத்தை, எந்தப் புலவன்தான் புகழவல்லவன்! பிரமன் சிருட்டியில் அகப்படாத காரிகையே இவள். ஆஹா! இவளன்றோ மங்கை! இவளை மணந்து வாழ்பவன் அன்றோ மனிதன்!—உம், இவற்றை எல்லாம் எண்ணி ஆவதென்ன! இவளோ, உயர்ந்த க்ஷத்திரிய குலத்துதித்த ஒண்ணுதலெனக் காணப்படுகிறாள் என் கண் முன். வீண்யோசனை!—அருகிற் சென்று, யார் என்று கேட்கவா? பதில் சொல்லாளாயின்? பார்ப்போம் எதற்கும் [சாவித்திரியிடம் சென்று] மாதே, இம்மனிதன், உன்னை யார் எனக் கேட்கலாமோ?

சா—(நாணுற்றவளாய்க் கீழ்நோக்கிய பார்வையுடன் புன்முறுவல் செய்கிறாள்.)

சத்—மாதரசி, என்மனம் களிக்க இன்பாய் இன்று, நன்மொழி பகராயோ?

சா—[நாணத்துடன்] இப்படம் யாருடையது பாரும். (கொடுக்கிறாள்.)

சத்—எப்படம்? [பெற்று] ஆ!—இது எப்படி வந்தது உன்னிடம்? உண்மையைச் சொல்.

சா—அடியாள் அரண்மனையில் இருந்தது.

சத்—அரண்மனையில்!—அஃதிருக்கட்டும்; நீ யார்?

சா—அடியாள் இவ்வூராளும் மன்னன் மகள்.

சத்—யார்! அஸ்வபதியின் மகளா? சாவித்திரியா!

சா—பிராணநாதா, தங்கள் அருமைத் திருவாயால், அடியாள் பெயரைச் சொல்லும் பாக்கியம் பெற்றேனே! இன்றே அடியாள் உய்ந்தேன்; புனிதையானேன்.

சத்—ஆ!—மத்திராபுரியாள் மன்னவன் மகளாய், மகிதலத் துதித்த மங்கையே, யான் என்செய்வேன்! இக்கொடியன் உன்காதலைப்பெற உரித்தானவன் அன்றே! அஃதிருக்கட்டும், நீ என்னை எங்ஙனம் அறிவாய்?

சா—பிராணநாதா,—

சத்—விஷயம் உரைப்பாய். வேண்டிலேன் அப்பெயர்.

சா—ஏன்?

சத்—பாவாய், யான் ஓர் ஏழை.

சா—பிராணநாதா, ஏழையினும் ஏழையாம் என் முன் தாம் ஏழை என்று சொல்வது நியாயமா? அடியாள் என்று தம்மைக் கனவில் கண்டேனே, அன்றே தம்மை மணாளராகக் கொண்டேன்.

சத்—என்ன! கனவில் என்னைக் கண்டாயா?

சா—ஆம்.

சத்—ஆம்!—அதன்பிறகு?

சா—என்தோழி சில படங்களைக் கொண்டுவந்து, என்முன் காட்டினள். அப்படங்களுள் ஒன்றாய் இருந்தது, இப்படம். ஆனால் இப்படத்தில் உள்ள தம்மை இன்னார் என்று அறியக்கூடவில்லை. அதனால் அடியாள் தந்தையிடம் சென்று, இப்படத்தில் உள்ள புருஷரைத்தேட உத்தரவு தருமாறு வேண்டினேன். அவர் அதைமறுத்து, பிராமணர்கள் பலரை அனுப்பி இருக்கிறார்.

சத்—அப்படியா? இப்படத்தில் உள்ள பாவியை இன்னான் என்று அறிந்து வரவா, அனுப்பினார்?

சா—பிராணநாதா, தம்மைத்தாமே அடியாள் முன் இங்ஙனம் எல்லாம் இகழ்ந்து சொல்வதைக் கேட்க, ஏழையின் மனம் சகிக்கவில்லை!

சத்—சகியாது! மாதே, யான் இப்போது எந்நிலைமையில் உள்ளளேன் என்பதை அறிவாயோ?

சா—எந்நிலைமையில் இருந்தாலும் என்ன?

சத்—அப்படி அல்ல; பெண்பாவாய். அன்று நீ அங்க நாட்டரசன் அரண்மனையிற்கண்ட, அவ்வாழ்வை இழந்தவனாய் உள்ளேன் நான் இப்போது.

சா—ஆ!—பிராணநாதா, இப்போதன்றோ ஞாபகம் வந்தது—தாம் சாலவபுரியின் இளவரசர் அன்றோ! அன்று அங்க நாட்டிளவரசர் திருமணத்திற்குத் தாம் தமது தந்தையுடன் வந்தபோது, தந்தையுடன் இருந்த அடியாளைப் பார்த்து நீ என்ன என்ன படித்துள்ளாய் என்று கேட்கவில்லையா?

சத்—ஆம், இப்போது அவ்வாழ்விழந்து, இறைவன்விட்ட வழியே நிற்கின்றோம். நல்லது, நான் வருகிறேன்; நேரம் ஆகிறது.

சா—பிராணநாதா, இது என்ன நியாயம்? இவ்வளவெல்லாம் அடியாள் சொல்லக்கேட்டும், தாம் போகலாகுமோ?

சத்—போகாமல் என்ன செய்வது? இன்னும் நீ என்னிலைமையை அறிந்தாய் இல்லை. சொல்கிறேன் கேள். என் தந்தையை வஞ்சித்து, நானில்லாத சமயத்தில் ஓர் சண்டாளன் அவர் ராஜ்யத்தை அபகரித்துக் கொண்டான்!

சா—அப்பாவி யார்?

சத்—சண்டாளன், அவன்தான் கஜகேது. அஃதிருக்கட்டும்; இப்போது நாங்கள், இந்நகர்க்கடுத்துள்ள கானகத்தே, கனிகிழங்குகளைத் தின்று காலத்தைக் கழிக்கின்றோம். காரிகையே, இவையே என் விருத்தாந்தம். இனி நான் செல்கிறேன். (போகிறான்.)

சா—பிராணநாதா, போகவேண்டாம். தாம் எப்படி இருந்தாலும என்ன? ஐயோ, காட்டில் என்மாமி மாமன்மார் ஒரு துணையும் இன்றி இருப்பார்களே! பிராணநாதா, அவர்களுக்குக் குற்றேவல் செய்யும் பாக்கியத்தையாவது அடியாள் அடைதலாகாதா?

சத்—ஆ! (அணைந்து) கண்ணே, மெச்சினேன், மெச்சினேன்; உன் காதலை. கேவலம் என் பொருட்டோ மேலாம் சுகங்களை இழக்க எண்ணுகிறாய்?

சா—பிராணநாதா, காரிகையார்க்குக் கணவரினும் மேலாம் சுகம்ஒன்று உண்டோ? தங்களுடன் இருந்து, தங்கள் பணியைச் செய்துகொண்டிருப்பதே, எனக்கு மேலான சுகமாம்.

சத்—உம்! ஈசன் திருவிளையாட்டை அறிந்தார் யார்? யான் என்றும் இல்லாதபடி வேட்டைக்கு வரவும், இளைப்புண்டாகவும், அதனால் இவ்விடத்திற்றங்கவும் காரணமாய் இருந்தது, நமது ஊழ் அன்றோ? ஆயினும்—

சா—பிராணநாதா, நம்மைக் கூட்டிய அவ்வூழாம் தெய்வத்தை நான் வாயார வாழ்த்துவேன். அது, அடியாள் தமது பணிப் பெண்ணாக இருக்கும் பெரும் பாக்கியத்தை அன்றோ, எனக்குத் தந்தது?

சத்—கண்ணே, காட்டில் என் பெற்றோர்கள் என் வருகையை நாடி இருப்பர். நான் போய் வருகிறேன்.

சா—என்ன பிராணநாதா, ஒன்றும் சொல்லாமல் போகிறீரே?

சத்—என்ன சொல்வது இன்னும்? எதற்கும் என் பெற்றோரனுமதி வேண்டும். நான் வருகிறேன்.

சா—ஒரு வார்த்தை—தாங்கள் அடுத்த வனத்திலா வாசம் செய்கிறீர்கள்?

சத்—ஆம், இந்நகரின் மேலண்டைப் பக்கத்துள்ள காட்டில்.

சா—பிராணநாதா! அடியாளுக்கு ஒரு வரம் அருளவேண்டும்.

சத்—என்ன வரம்!

சா—தாம் அடியாளைக் கைவிடுவதில்லை என்று—

சத்—அப்படியே ஆகட்டும். ஆனால், பெற்றோரனுமதியைப்பற்றி யான் கூறியதை மறவாதே.

சா—அவர்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

சத்—அஃதே வேண்டியது. நான் வருகிறேன்.

சா—மறந்துவிடுவீரோ?

சத்—மறப்பதாவது! இதோ சொல்கிறேன், கேள். மாநிலத்தொருத்தியை மணப்பதென்றால், மங்கையே, அவ்வொருத்தி நீயே என எண்ணுவாய்.

சா—உண்மையில்?

சத்—உண்மையாய், சத்தியமாய் உரைத்தேன் இன்னும் என்ன? (முத்தம்தந்து) போய்வரவா?

சத்—(உள்ளிருந்து) அம்மா! அம்மா! அம்மா!

சா—ஆ—போய் வாரும்.

[சத்தியவான்சாவித்திரியைப்பார்த்தவண்ணமே போகிறான்.]

ஐயோ, இன்னும் சிறிதுநேரம் இருக்கும்படி கேட்டுக்கொள்ளாமற் போனேனே!—கூப்பிடட்டுமா? அவர் எவ்வளவோதூரம் போய்விட்டாரே! ஆ, அதோ திரும்புகிறார். (15)

[சந்திரிகைவருகிறாள்.]

சந்—என்ன அம்மா செய்துகொண்டிருந்தீர்?

சா—நான் என்ன செய்துகொண்டிருந்தேன்? நீ வரவில்லையே இன்னும்என்று பார்த்திருந்தேன்.

சந்—ஓஹோ! சரிதான்—அடடா! என்ன அழகு! என்ன அழகு!!

சா—என்ன! எதைப்பற்றிச் சொல்கிறாய் சந்திரிகா?

சந்—உங்கள் விஷயம் அல்ல அம்மா. நான் இந்தச்சோலையில் அழகுள்ளகிளிகள் இரண்டைப் பார்த்தேன். அதைப்பற்றிச் சொல்லினேன்.

சா—என்ன, என்ன! கிளிகளா?

சந்—ஆம், அக்கிளிகள் இரண்டையும் பார்க்கும்போது, சரியாய் இருந்தது. மனுஷ பாஷையில் பேசிக் கொண்டிருந்தன.

சா—அப்படியா!

சந்—அம்மா! அவற்றில் ஒருகிளி ஆண்கிளி! மற்றொன்று பெண்கிளி! இரண்டும் கொஞ்சிக் குலாவி முத்தம் இட்டுக்கொண்டன!

சா—சந்திரிகா, நீ சொல்வது எனக்கொன்றும் விளங்கவில்லையே.

சந்—விளங்குமா? பார்த்த எனக்கே விளங்கவில்லையே!

சா—சந்திரிகா, அவை இப்போது எங்கிருக்கின்றன? வா, பார்ப்போம்!

சந்—பார்க்கமுடியாதே. ஒருகிளி ஓடிப்போய்விட்டது. அதுபோனதும், அதைப்பார்த்த வண்ணமே பெண் கிளி பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறது.

சா—ஐயோ! அந்தப்பெண்கிளி எங்கே இருக்கிறது?

சந்—இங்கே இவ்விடத்தில் நின்றுகொண்டிருக்கிறது.

சா—(தனக்குள்) நம்மைத்தான் இவள் இப்படி சொல்கிருளோ? சந்திரிகா, எதோ காண்பி பார்ப்போம்.

சந்—இப்படிவாரும் காட்டுகிறேன். நன்ருய்ப்பார்க்க வேண்டும். ஒருவேளை அக்கிளி உங்கள் கண்ணிற்கு அகப்படாமலும் போகும். இப்படி வந்திரா? தெரிந்து கொள்ளும் கிளியை.

சா—என்ன! எங்கேகிளி?

சந்—நீங்கள் தான்.

சா—(நாணத்துடன்) ஆகட்டும், சொல்கிறேன்.
[போகிருள். அவளுடன் சந்திரிகையும் செல்கிருள்]

## முதலங்கம் - நான்காங் காட்சி.

களம்: சாலுவபுரியை அடுத்தகாடு—காலம்: காலை.

காலவன்—இன்னும் உங்களுக்கு நான் என்ன சொல்வது? நீங்களே யோசித்துப்பாருங்கள். தியுமத்சேனர் காட்டிற்சென்ற நாள் முதலாக நமதூரில், தீயர்கள் எல்லாம் தலைவிரித்துக்கொண் டாடுகிருர்கள். கேள்வி முறையே கிடையாது. குடிகளே, நாம் அச்சண்டாளனுகிய கடகேதுவின் கழுத்தைத்துணித்துப்போடும் அளவும், நமக்குக் கஷ்டம் கஷ்டமே. நமது நாட்டிற்கே பெருங்கேடு விளையும். நீங்கள் எதற்கும் அஞ்சவேண்டாம். நான் இருக்கிறேன், உங்களுக்குத் துணையாக. பாருங்கள், அக்கொடியன் இந்நாட்டை வஞ்சகமாய்க் கைப்பற்றிக் கொண்டதும் அன்றி என்னைக்கொண்டே நமது மஹாராஜாவை

யும், இளவரசரையும் கொல்ல எண்ணினன். ஆ! இவற்றை எல்லாம் நீங்கள் கேட்டும் வாளா நிற்கின்றீரே. ஐயோ, அவர்களை நான் நேரிற்கண்டபோது, என் வயிறெல்லாம் எரிந்தது! குடிகளே, நமது தியுமத்சேனர் நம்மீது எவ்வளவு பிரியம் உடையவராக இருந்தார்? அத்தகைய புண்ணியர் காட்டில் காய் கனி கிழங்குகளைத் தின்று தங்காலத்தைக் கழிக்கின்றாரே! இன்னும் உங்கள் மனம் கரைய வில்லையா? நம்மை எல்லாம் தாய் என ஆதரித்த நற் குடும்பம், தன் நாடிழந்து, நலம் இழந்து, காட்டில் வாசம் செய்கிறதே! என்ன சொல்கிறீர்? இனியாவது ஒன்று சேர்வீர்களா?

குடிகள்—சேர்வோம், சத்தியமாய்ச் சேர்வோம்.

கால—வீணே மேலுக்குச் சொல்லாதேயுங்கள். உங்கள் நன்மையைக் கோரியே நான் சொல்கிறேன். இப்பாதகன் நமக்கு அரசனாய் இருக்கும் வரையில், நாம் பலவாய துன்பங்களுக்கு உள்ளானவராவோம். அதை எண்ணுங்கள். இப்போது எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள்? அது உங்களுக்கே தெரியும். நம்முடைய அரசர் இருந்தபோது! உங்களுக்கு எப்போதாவது, இத்தகைய கஷ்டம் ஏற்பட்டதா?

குடிகள்—இல்லை, இல்லை, இல்லை; என்றும் இல்லை.

கால—அதை அறிந்தும் ஏன் பேசாமல் இருக்கிறீர்? இன்றே துவஜம் தொடுங்கள். சலியாமல் காரியத்தை நிறை வேற்றுங்கள். செய்வதை அதிக இரகசியமாகச் செய்யுங்கள். அவர்கள் காதிற்கு இச்சமாசாரங்கள் எட்டவே கூடாது. காரியத்திலேயே கண்ணுயிருங்கள். அக்கஷ்டங்கள் எல்லாம் முடிவில் இன்ப

மாகவே முடியும். சொல்லினேன், என்ன சொல்கிறீர்? நான் சொல்லியபடியே செய்வீரா?

குடி—செய்கிறோம்.

கால—சத்தியமாகச் செய்வீரா?

குடி—சத்தியமாகச் செய்வோம்.

கால—ஆணையிட்டாயது, மறந்து போய்விடாதீர். இதே எண்ணம் இருக்கவேண்டும்; நமது காரியம் முடியும் வரையில்.

குடி—அப்படியே.

கால—நல்லது, இனி நாம் போவோம்.

[எல்லோரும் செல்கிறார்கள்.]

---

## முதலங்கம்—ஐந்தாங்காட்சி.

களம்: அண்மனை.—காலம்: காலை.

அஸ்வபதி—மாளவி, நீ என்ன சொல்லியும் ஒரே பிடிவாதமாகவா இருக்கிறாள்?

மாளவி—ஆம். நானென்னால் ஆனவரையிலும் சொல்லிப் பார்த்தேன். அதையெல்லாம் அவள் காதிலேயே போட்டுக்கொள்ளவில்லை. இதற்கு நாம் என்ன செய்வது?

அஸ்—என்ன செய்வது நாம்!—அந்தோ, சாவித்திரி! அருமையாய்ப் பெற்றுவளர்த்த உன்னை ஓர் ஏழைக்கோ, ஆ! காட்டில் வாசம் செய்யும் காளைக்கோ, கடிமணம் செய்யமனம் துணிவேன்? உன்னையான் உலகாளுமன்னன் ஒருவனுக்கு ஈந்து, நீ சக்கிரவர்த்தினி

யாய் வாழ்வாய் என்று களிப்புடன் இருந்தேனே!—மாளவி, நீ சத்தியவான் ஏழை என்பதை அவளிடம் தெரிவித்தாயா?

மா—நான் தெரிவிப்பதற்கு முன்பே, அவளே சொல்லி விடுகிறாள்.

அஸ்—ஐயோ! அருங்காட்டில், அவன் பெற்றோர்களுக்கு அடிமையாய்க் காலங்கழிக்க வேண்டுமே என்று சொல்லலாகாதா?

மா—என்ன சொல்லியும் கேளேன் என்கிறாளே!

அஸ்—ஆஹா!—மாளவி, நீசென்று சாவித்திரியை அழைத்துக்கொண்டுவா, நானுவது சொல்லிப் பார்க்கிறேன்.

மா—அப்படி செய்யுங்கள். (போகிறாள்.)

அஸ்—ஈதென்னகாலம்! உலகில் பெண்கள் எல்லாம், அழகிலும் செல்வத்திலும் உயர்ந்த ஆடவனையே மணம் கொள்ள இசைவார்கள். அதைவிட்டு, என்மகள் உண்ண உணவின்றி, ஓர் துணையும் அற்று, தன் காலத்தைக் கழித்து வரும் அச்சத்தியவந்தனையே மணக்க மனந் துணிந்தனளே! ஒருவேளை அவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ? இல்லாவிடின், இப்படிசெய்ய மனம் துணிவாளா?—நான் எப்படி என்மனமார என் அருமைப்புதல்வியை—அருந்தவத்துதித்த செல்வியை, அவனுக்குத்தர இசைவேன்! ஆஹா! புத்திரப்பேறின்றிச் சித்தங்கலங்கி இருந்த என்னை, மெத்தவும் களிப்பூட்டிய புதல்வி ஆயிற்றே! சாவித்திரி! உனக்கு இந்த எண்ணமும் உண்டாக வேண்டுமோ! ஐயோ! முன்னமே அப்படத்தில் உள்ள புருஷனைச் சத்தியவான் என அறிந்திருந்தால், நான் அந்தப் பிராமணர்களையும் அனுப்பி யிரேனே!

அவனுக்கே உன்னைமணமுடிப்பதாய் அறைந்திரே னே! (16) ஆ! என்னமாயம்! உன் தாய் சொல்லிய வார்த்தைகளை எல்லாம் நிராகரிந்தாயாமே!—

[நாரதர் (17) பாடிக்கொண்டு வருகிறார்,]

ஆ! சுவாமி! (பணிகிறான்)

நாரதர்—மங்களம் உண்டாகுக! அஸ்வபதி, எழுந்திரு,

அஸ்—(எழுந்து) கருணையங்கடலே! காருண்ய மூர்த்தி! ஈதன்றோ நற்றினம் எனக்கு! சுவாமி, அனுயாசமாய் அடியேன் தங்கள் தரிசனத்தைப்பெற்ற பாக்கியம் அன்றோ பாக்கியம்!

நா—அஸ்வபதி! அவைஎல்லாம் இருக்கட்டும். என்ன உன் முகம் ஏக்கத்தைக் காட்டுகிறது? சகலைஸ்வர்ய சம் பன்னனாகிய உனக்கு என்னகுறை ஏற்பட்டது?

அஸ்—முனீந்திரா, தாம் அறியாத தொன்றுண்டோ இவ் வுலகில்? அடியேனை, எல்லாம் அறிந்த தாங்கள், இப் படியும் பரிசோதிக்கலாமோ? திரிலோக சஞ்சாரி யாய், பூதபவிஷ்யத் வர்த்தமானங்களை எல்லாம் அங் கை நெல்லிக்கனி என அகத்தே உணரும் தேவரீருக் கும் அடியேன் என் மனக்குறையைச் சொல்ல வேண்டுமோ?

நா—அஸ்வபதி! இது என்ன கேள்வி! எனக்கென்ன தெரியும் உன் மனதில் உள்ள குறை? நான் தேச சஞ்சாரம் செய்து கொண்டு, இங்கராம் வரும்வழி யில் உன்னைப் பார்த்து நீண்ட நாளாயிற்றே என்று, பார்த்துப்போக வந்தேன். அஃதிருக்கட்டும், உன் பத்தினி க்ஷேமமாய் இருக்கிறாளா?

அஸ்—சுவாமி, தங்கள் ஆசீர்வாதத்தால் க்ஷேமமே உள் ளாள் அவள்.

நா—சந்தோஷம்! குழந்தை சாவித்திரிக்கு மணம்முடிந்ததோ?

அஸ்—ஆ!—சுவாமி!

நா—என்ன! என்ன அஸ்வபதி! என்ன சமாச்சாரம்? ஏன் வருந்துகிறாய்?

அஸ்—சுவாமி, எல்லாம் உணர்ந்ததாம் ஏழையாம் என்னை, இப்படியும் கைவிடலாமா, இச்சமயத்தில்! தங்கள் அனுக்கிரகத்தால் அன்றோ, தனையையை ஈன்றேன்?

நா—என்ன இது!—அஸ்வபதி, சாவித்திரி சுகந்தானே!

அஸ்—சுவாமி, தங்கள் கடாக்ஷ வீக்ஷண்யத்தால் குழந்தை சுகமே இருக்கிறாள்.

நா—அது தான் வேண்டியது. இப்போதென்ன சமாசாரம்? நீ ஏன் வருந்துகிறாய்?

அஸ்—குருசுவாமி, நான் எப்படி மனம்துணிந்து, என் அருங் குழந்தையை, கானகத்தே—அந்தோ! கடும் புலி முதலிய துஷ்ட மிருகங்கள் சஞ்சரிக்கும் அக் கொடுவனத்தே, அனுப்ப மனம் துணிவேன்!

நா—என்ன! என்ன! சாவித்திரியையா காட்டிற் கனுப்பப் போகிறாய்? ஏன்?

அஸ்—முனீந்திரா, இன்னும் ஏழைமேல் வன்மமா! எல்லாம் தாம் அறியீரா! (18)

நா—அஸ்வபதி; எதுவிஷயம் நீ சொல்கிறாய்?—என்னவோ சாவித்திரி, சத்தியவானை மணம் செய்துகொள்ளத் தீர்மானம் செய்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். மணம் முடிந்ததோ?

அஸ்—முனிபுங்கவா, இன்னும் மணம் ஆகவில்லை. ஏழையேன் அதுவிஷயமாகவே என்ன செய்வது என்று யோசித்துக் கலங்கி வாடிநிற்கும் தருணம் கண்டேன் தேவரீரை—

[சாவித்திரி மாளவியுடன் வருகிருள்.]

மாளவி—குருநாதா! (பணிகிருள்)

நா—மங்களானி பவந்து! அம்மா, எழுந்திரு.

சா—(மாளவி எழுந்தபின்) முனீந்திர! நமஸ்காரம். (பணிகிருள்)

நா—தீர்க்க சுகமங்கலீபவ!—குழந்தாய் சாவித்திரி, எழுந்திரு.

சா—(எழுந்து ஓர் புறமாய் நிற்கிருள்).

நா—அஸ்வபதி, நேரமாயிற்று; நான் வருகிறேன்.

அஸ்—சுவாமி, தேவரீர் இப்படியும் எங்களை இந்நிலைமையில் விட்டுச் செல்லலாமோ? தங்களைக் கண்டதும், அடியேன் குறை எல்லாம் அற்றெழிந்தது என்றன்றே எண்ணினேன்?

நா—இப்போது என்னை என்ன செய்யவேண்டும் என்கிருய்?

அஸ்—தேவரீர் எப்படியாவது சாவித்திரிக்கு ஏற்பட்டுள்ள பைத்தியத்தை நீக்கிச் செல்லுமாறு வேண்டுகிறேன்.

நா—என்ன, அஸவபதி! சாவித்திரிக்காவது பைத்தியமாவது?

அஸ்—மற்றென்ன சுவாமி, அவள் ஒரே பிடிவாதமாக இருக்கிருளே, அந்தச் சத்தியவானையே மணப்பேன் என்று.

நா—அப்படியா?—அம்மா சாவித்திரி, இப்படிவா.

சா—(நாணத்துடன் நிற்கிறாள்.)

மா—போ அம்மா, குருசுவாமி கூப்பிடுகிறார்.

சா—(நாரதரிடம் செல்கிறாள்.)

நா—சாவித்திரி, இது உண்மைதானா?

சா—(நாணத்துடன் மாளவியின் முகத்தைப் பார்க்கிறாள்.)

மா—குரு சுவாமி கேட்கிறாரே, சொல் அம்மா. அவரிடம் சொல்லவுமா உனக்கு வெட்கம்?

நா—வெட்கமென்ன?—சாவித்திரி, என்ன சமாச்சாரம்?

சா—ஒன்றும் இல்லை சுவாமி.

நா—ஒன்றும் இல்லையா? அப்படியானால், இவர்கள் எல்லோரும் இப்படி வருந்துவானேன்?

மா—குருதேவா, குழந்தை தேவரீரிடம் கூற வெட்கப்படுகிறாள். இவள் சத்தியவந்தனை யன்றி மற்றொருவனை மணப்பதில்லை என்று ஒரே பிடிவாதமாய் இருக்கிறாள்.

நா—மாளவி, நீ இரு—சாவித்திரி, நீ வேறொன்றும் சொல்ல வேண்டாம். இப்போது உன் தாயார் சொல்லியது உண்மையா அல்லது உண்மையல்லவா? அதை மாத்திரமாவது சொல்.

சா—(நாணி) உண்மைதான்.

நா—என்ன! என்ன! உண்மையா?

சா—ஆம்.

அஸ்—ஆ!

நா—சாவித்திரி, இப்போது சத்தியவான் எந்தநிலைமையில் இருக்கிறான் என்பதை அறிவாயோ நீ?

சா—(நாணத்துடன் பேசாதிருக்கிருள்.)

நா—என்ன பேசாமல் இருக்கிருய்?

சா—எல்லாம் அறிவேன் சுவாமி.

நா—அறிவாய்! அப்படி அறிந்துமா அவனையே மணம் புரியத் தீர்மானித்தாய்?

சா—ஆம், சுவாமி.

நா—சாவித்திரி, நான் சொல்வதைக் கேள். நீயோ அரச செல்வத்தில் இருக்கப்பட்டவள். அந்தச் சத்தியவந்தனே, நாடிழந்து நலமிழந்து, தன் கண்ணிழந்த பெற்ருேர்களுக்குத் தொண்டு செய்து காலத்தைக் கழித்து வருகிருன்; கானகத்தில். நீ அவனை மணந்து கொள்வதால் என்ன சுகத்தை அனுபவிக்கப் போகிருய்? காலையில் எழுந்தால் உன் கண்ணிழந்த மாமி மாமனுக்குக் குற்றேவல் செய்யும் வேலையே பெரிய வேலை ஆகப்போகிறது. வேண்டாம், உன் எண்ணத்தை விட்டுவிடு.

சா—சுவாமி, எல்லாம் அறிந்த தேவரீர்முன் ஏழை என்ன சொல்லப் போகிறேன்? மனத்தில் ஒருவனை மணந்த மங்கை மற்ருெருவனை அம்மனத்தால் நாடலாமோ? சுவாமி, அடியாள் எப்போது இப்பூமியில் உதித்தேனே, அப்போதே வந்தவையோ இந்த அரச செல்வங்கள்? அன்றி, யான் இறந்து இடுகாடு செல்லுங்காலத்து, என்னுடன் துணையாய் வருபவையோ? சுவாமி, இடையே உண்டான இச்செல்வத்தை ஓர் பொருளென எண்ணியோ, நான் என் எண்ணத்தின் நீங்கி மீளா நரகிற் காளாகவேண்டும்? சகல சாஸ்திர போதகராகிய தாமே இங்ஙனம் உரைத்தால் ஏழை என் செய்வேன்?

நா—சாவித்திரி, நீ கூறிய யாவும் உண்மையே.—அஸ்வபதி, என்ன செய்யப்போகிறாய் நீ? சத்தியவானும் சாமானியன் அல்ல. அறநெறியிற் சிறிதும் தவறாதவன்; மிகவும் சற்குணன். மஹா விவேகி. அழகிலும் அருங் குணத்திலும் அவனிலும் சிறந்த வீரன் ஒருவனை நீ அவனியிற் காண்பதே அரிது.

மாளவி—பிராணநாதா, நமது குருசுவாமிதான் சொல்கிறாரே; இன்னும் என்ன? அவனுக்குப் பொருளொன்றுதானே குறைவு? நாம் இல்லையா அக்குறையை நிவர்த்திக்க? சாவித்திரியும் ஒரே பிடிவாதமாக இருக்கிறாள்.

அஸ்—ஆம், உண்மையெ—குருசுவாமி, தேவரீரே இங்ஙனம் சொல்லும்போது, ஏழை மறுப்பதற்கென்ன உண்டு? அப்படியானால் சாவித்திரியை அவனுக்கே மணமுடித்து விடலாம்.

நா—அஸ்வபதி,—பொறுசற்று. அந்தச்சத்தியவந்தன் எவற்றிலும் குறைவு படாதவன் என்பது உண்மையே. எனினும்—

அஸ்—என்ன சுவாமி, ஏதோ சொல்லவந்தவர் மறைக்கப் பார்க்கிறீரே?

நா—அஸ்வபதி! அஸ்வபதி! நான் எப்படி மனம் துணிந்து இக்கொடிய வார்த்தையைச் சொல்வேன்!

அஸ்—என்ன! சுவாமி, என்ன தெரிவியுங்கள்!

நா—தெரிவித்து ஆவதென்ன? சாவித்திரியோ ஒரே பிடிவாதமாக இருக்கிறாள்—அம்மா சாவித்திரி, நீ நல்ல புருஷனையே மனநாடினாய். (19) என்றாலும், அந்தோ! அவன் இன்னும் ஆண்டொன்றுள் மடிந்தொழிவனே!

சா—ஆ! பிராணநாதா! (மூர்ச்சையாகிறாள்)

நா—ஆஹா! அஸ்வபதி! மாளவி! முதலில் குழந்தையைத் தேற்றுங்கள்.

[மூவரும் சாவித்திரியின் மூர்ச்சையைத் தெளிவிக்கிறார்கள்.]

சா—ஆ! பிராணநாதா!—(20) என் தலையில் எழுதிய விதி இப்படி இருந்தால், அதைத் தடுப்பவர் யார்! (எழுந்து; துயருடன் இருக்கும் பெற்றோரை நோக்கி) அண்ணா, என்பொருட்டு ஏன் தாம் இப்படி வருந்த வேண்டும்? ஈசன் கட்டளை இவ்விதமானால், அதையாரால் விலக்க முடியும்—அம்மா, வருந்தாதீர். நான் என் பிராணநாதருடன் இருப்பது இன்னும் ஒருவருடம் என என் குருசுவாமி கூறக்கேட்டும், இங்கிருப்பது நல்லதல்ல நான். இங்கிருக்கும் ஒவ்வொரு க்ஷணமும் எனக்குப் பெரிதும் வருத்தும் யுகங்கள் போலக் காண்கிறது. நான் விரைவில என் பிராணநாதரிடம் போக வேண்டும். அம்மா— அண்ணா, என்னை அங்குக் கொண்டுபோய் விட்டுவிடுங்கள்.

மா—அம்மா! அம்மா! சாவித்திரி!

சா—அம்மா! என் விதியை எண்ணி நான் அல்லவோ வருந்தவேண்டும்? எனக்கென இருக்கும் இந்த ஒரு வருஷத்தையாவது, நான் என் கணவருடன் கூடி இருக்க, தாம் நாடலாகாதா!—அண்ணா! தமது வயிற்றில் இப்பாவி பிறந்ததற்காவது, இவ்வுபகாரத்தைச் செய்தலாகாதா!

அஸ்—சாவித்திரி! இது என்ன அநியாயம்! இன்னும் ஒரு வருடம்தான் உயிருடன் இருப்பான் என்று

நம் முனிபுங்கவர் கூறிய அவனுக்கு, உன்னை மண முடித்துக் கொடுப்பதோ உபகாரம்! குழந்தாய், எங்களை நீ இப்படி எல்லாம் வருத்தலாமோ?

சா—அண்ணா, அதுவே தாம் எனக்குச் செய்யும் பேருபகாரமாகும். பாவிநான், பாரினில் கோரிய பார்த்திபனையே மணந்து, பின், பரமன்தாள் அடைவேன்! இல்லாவிடின், அண்ணா! பெண்ணாய்ப் பிறந்தும் பேயாய்த் திரிவேன் அன்றோ?

அஸ்—அம்மா! உன் சிறிய புத்திகொண்டு இப்படிசொல்கிறாய். ஏன் வீணே உன் இளமையைப் பாழாக்கிக் கொள்கிறாய்!

சா—அண்ணா, அப்படி சொல்லாதீர். நான் எவரும்பெறாத சுகிர்தத்தையே அன்றோ அடைவேன்? தங்களுடைய மகள், தன் கருத்தில் மணந்த காதலரையே மணந்து, அக்காதலருடன் ஓர் வருடம் சென்றதும் அவளும் தீப்பாய்ந்து இறந்தாள் என்பதைப் பிறர் சொல்லக்கேட்ட, தாமும் பெருமையை அன்றோ அடைவீர்?

அஸ்—ஆ! சாவித்திரி!—இன்னும் ஒருவருஷம் இருக்கப் போகும் அவனுக்கா—

சா—அண்ணா, அவர்தான் ஓர் வருஷம் இன்னும் உயிருடன் இருக்கப் போகிறார் என்பதையாவது நாம் தெரிந்துகொண்டோம். பாவி நான் அந்த ஒருவருடமாவது உயிருடன் இருப்பேன் என்பது எவருக்குத் தெரியும்? இன்றே எமன் வந்தால், என்னை அவன் கையினின்றும் தப்புவிக்கத் தங்களால் ஆகுமோ?

மா—சாவித்திரி, வேண்டாம்; தந்தை சொல்வதைக் கேள்.

சா—அம்மா, என் மனநிலையை ஏன் கெடுக்க எண்ணுகிறீர்? இப்போது ஒரே வார்த்தை சொல்கிறேன். மண்ணில் மங்கை நான் மணந்தால், அம்மகிபரையே மணப்பேன். இல்லாவிடின் இப்படியே இறப்பேன்; இது சத்தியம்.

நா—ஆஹா! சாவித்திரி! அப்படி சொல்லாதே.

சா—சுவாமி, ஏன் சொல்லலாகாது?

மா—கண்ணே! இதற்கோ நானுன்னை மகளெனப்பெற்றேன்! அம்மா! நீ ஓராண்டு சென்றபின் உன்னை இப்பாவிங் கண்களால் எங்ஙனம் காண மனம் சகிப்பேன் நான்!

சா—அம்மா, நான் தாம் எண்ணிய அவ்வுருவுடன் இவ்வவனியில் இரேனே அப்போது.

மா—ஆ!—பெற்ற என்வயிறு, அதை எண்ணும்போது பஹீரென்குதே—சாவித்திரி, நீ அவனை மணம்செய்து கொண்டாயா என்ன, அவன் உனக்கு மணாளனாக? வேண்டாம், உன் எண்ணத்தைவிட்டு, வேறு யாரையேனும் மணந்துகொள்.

சா—அம்மா, அம்மா, அதைவிட உன் உயிரை இந்த க்ஷணமே விட்டுவிடு என்று சொல்லிவிடுமே!

நா—சாவித்திரி, யோசித்துச்செய். தாய் தந்தையர் சொல்லைத் தட்டாதே. இவர்கள் உன் நன்மையைக்கோரியே சொல்கிறார்கள்.

சா—சுவாமி, இது என் நன்மையை எப்படி கோரியதாகும்? பாழ்நரகில் எனை வீழ்வதாகும் அன்றோ,

பாவை நான் அப்பார்த்திபரை மறந்து மற்ருெருவரை மணப்பது?

நா—அம்மா, அற்பாயுள் உள்ளவனை அவனியில் மணப்பதாநீ?

சா—ஆ!—மறந்தேன்; சுவாமி அடியாள் என்ன மனமருண்டேன்! அவர் எப்படி இருந்தாலும் இருக்கட்டும். இனி சாபானுக்கிரக சக்திவாய்ந்த தேவரீர் வாக்குமோ பொய்த்து விடும்?

நா—என்ன! என்ன!

சா—ஒன்றும் இல்லை சுவாமி. அடியாள் தம்மை முதலில் வந்து பணிந்தபோது, தேவரீர் என்ன என்று அநுக்கிரஹம் செய்தீர்?

நா—அதை ஏன் கேட்கிருய்? சகஜமாய்ச் சொல்வதுபோல, தீர்க்க சுமங்கலீபவ என்றேன்.

சா—அதுவே போதுமானது, அடியாள் உய்வடைய. அண்ணு— அம்மா, நாம் வருந்தவே வேண்டாம். இம்முனிவர்வாக்கு பொய்த்த போதன்ருே, என் பிராணநாதர் இறக்கப்போகிருர்!

நா—சாவித்திரி! சாவித்திரி! இது என்ன அநியாயம்? நான் சாதாரணமாய்ச் சொல்வதுபோலச் சொல்லினேன். நீ அதை மெய் யென்று எண்ணலாமோ? சரி சரி. நான் இங்கு வந்திருக்கவே கூடாது.

சா—சுவாமி, தாம் வந்தது அடியாளை அநுக்கிரஹம் செய்ய அன்ருே?

நா—சாவித்திரி, மெச்சினேன் உன்னை. நீயேபதிவிரதை. அம்மா, இவ்வளவு சொல்லியும் கேளாமல், நீ உன் கற்பைக் காப்பதிலேயே கண்ணுய், கருத்தில்

மணந்த காதலனையே மணக்கமனம் துணிந்தாயே! உன்னை யன்றோ பெண் எனச் சொல்லவேண்டும். ஆஹா! மணமுடியாமலிருந்தும், மனத்தில் எண்ணியதே போதும் என அறிந்து, வரும் துன்பங்களையும் எண்ணுது, மங்கையர்க்கு மாட்சிமையைத்தரும் கற்பென்னும் ஆபரணத்தை மேற்கொண்டு, அம்மகிபனையே மணுளனுக வரிக்க எண்ணிய தெரிவையே! அக்கற்பே உன்னைக்காப்பதாக! அக்கற்பே உன்னைக் களிப்புறச் செய்வதாக! மணந்த மணுளனிருக்க, மண்ணில் மற்றுமோர் ஆடவனை எண்ணும் மங்கையர் எல்லாம் உன் கலங்காத கற்புநெறிகண்டு பங்கமுறுவாராக! சாவித்திரி, கற்பை மறவாதே. அதுவே உன்னைக்காத்திடும்—அஸ்வபதி, நீ ஒன்றும் தடை சொல்லாது, அச்சத்தியவானுக்கே, இவளை மணமுடிப்பாயாக! அதனுல் ஒரு குறைவும் நேரிடாது.

அஸ்— சுவாமி, தங்கள் சித்தம்.

நா—சரி—அம்மா சாவித்திரி நீ என்னுடன் வா—அஸ்வபதி மாளவி, நீங்களிருவரும்போய் விவாகத்திற்குரிய ஏற்பாடுகளை எல்லாம் செய்யுங்கள். நான் சாவித்திரிக்கு கௌரி விரதோபதேசம் செய்து அழைத்துவருகிறேன்.

அஸ்—அப்படியே சுவாமி. (மாளவியுடன் போகிருன்)

நா—சாவித்திரி, நீவா. (வேறுவழியாய் அழைத்தேகுகிருர்.)

---

## முதலங்கம்—ஆறாங்காட்சி.

களம்: காடு—காலம்: முற்பகல்.

[முனிவர்களும் பிராமணர்களும் வேதவிதிப்படி மணவினை நடத்துகிறார்கள்.]

நாரதர்—அஸ்வபதி, தியுமத்சேனா, மாங்கல்யதாரணம் செய்விக்கலாமோ?

அஸ்—சுவாமி, அடியேனையும் கேட்கவேண்டுமா?

தியு—குருசுவாமி, நமது மனதைப் பரிசோதிக்கிறார்.

நா—சரி—(சத்தியவானிடம் தாலியைத்தந்து)-வாத்தியம்!

[வாத்திய கோஷமும் வேதகோஷமு முண்டாகிறது. சத்தியவான் மாங்கல்யதாரணம் செய்கிறான்.]

எல்லோரும்—மங்களானிபவந்து! (அக்ஷதையிட்டு ஆசீர்வதிக்கின்றனர்.)

[சத்தியவானும் சாவித்திரியும் ஹோம குண்டத்தைச் சுற்றிவந்து மாலைமாற்றிக் கொள்கிறார்கள்.]

எல்லோரும்—மங்களானிபவந்து! (ஆசீர்வதிக்கிறார்கள்.)

முதலங்கம் முற்றும்.

---

## இரண்டாமங்கம்—முதற்காட்சி.

களம்: காடு—காலம்: முற்பகல்.

[கலசத்திற் கௌரியை ஸ்தாபனம் செய்துவைத்திருக்கிறார்கள். சாரளன்கையிற் சில பழங்களுடன் வருகிறான்]

**சார**—நல்லா ஆப்டுக்கினலும் ஆப்டுக்கினேன், இவங்க கிட்ட, எம்பாடு போதுமுனு போவுது. அப்பா! இது ஒருபலுவு (பழங்களைக் கீழ்வைத்து) அப்பா டா!—எழவு இந்த நாலேஞ்சிநாளா யாருமூஞ்சிலே முழிக்குறனே தெரியிலே, இப்படி கஷ்டபடறேன் பட்டினியா. ஆஹா! எம் மூஞ்சி எதிரேகாத்தாலேங் காட்டியுங் நிக்கிற புண்ணியவானே, ஆவுட்டும், இன்ன பன்றன்பாரு. அவன் மூஞ்சிலே அவனேயே முழிக்க வைச்சிடறேன். அப்போதான் அவனுக்கு கஷ்டம் தெரியும். இல்லாப்போன இப்பிடியே தினங்தோறும் என்னே கரைய வைச்சுடுவான்—அடடா! இன்ன மா கரைஞ்சிபூட்டேன், இந்த ஐஞ்ஞாறு நாள்லே! ஐயையோ! என்னே பாக்கிறவங்கள்ளாம், என்னே நல்லாமணல்லே புடுங்கின வள்ளிக்கிழங்கு மாதிரி இருக்கிறேன்னு கூட சொன்னுங்களே! இப்போ இப் பிடி பூட்டனே! அந்தப் பாவிங்க கண்ணுபட்டு இப்பிடி யாச்சா? ஆமாம் ஆமாம் அப்பிடிதாங் இருக்கும்— அதுக்கின்னு செய்றது இப்போ?—ஆம், நல்ல ஒளவு, கண்ணூறு வந்தாகல்ல தூக்கி தலமேலே போட் டுக்குறதுன்னு, ஒருத்தன்முன்னே யாரோ ஒருத்த னுக்கு சொன்னன்! அதான் வைத்தியமாருக்கும் அதுக்கு— (கல்லொன்றை எடுத்து) அம்மாடி! இவ் வளோ பெரியகல்லே தலமேலே போட்டா, தலே ஒடிஞ்சி போவாதா? சீ சீ! வாணும், வாணும், (கல்லைக் கீழ் எறிந்து) அப்போ இன்னு தான் செய்யுறது!— அப்பா! இன்னு பசிக்குது. இன்னும் வரக்காணமே அவங்க. சர்தான் சர்தான், தெரிஞ்சிக்கினேன், இத் தாலேதான் நான் கரைஞ்சி கரைஞ்சி போறேன். பசி வேலேக்கி ஒன்னும் போடமாட்டேன் இன்றூங்களே. இந்த ஐஞ்சாறு நாளா இப்பிடியே செய்தாக்கா?—

நல்லா என்னே அந்தரிஷி இவங்ககிட்டபோயி வேலே செய்யிடா இன்னு அனுப்பிச்சிட்டாரு. நானும் பாக்கிறேன், முன்னல்லாம் இப்பிடி இல்லே. அந்த சத்தியவான் இப்போ பொண்டாட்டி வந்துட்டாங்களே, அந்தம்மாபேச்சே தலேமேலே வைச்சிக்கிருரு. எம்பாடு போதுமுன்னு போவுது. உம் உம் பூசே. நல்ல பூச செய்ருங்க, அந்தம்மா. இன்னமோ தேங்கா. அவங்கபூசே முடிறவரையிலும் நானு ஏன் பட்டினியா இருக்கவேணும்? இந்தஎழவுக்கு நானு ரொம்ப காலேயி லெழுந்துடனுமாம். எழுந்துக்காபோனு, சத்தியவான் தட்டி தட்டி எழுப்பிட்ருரு. எழுந்தா குளிக்கசொல்ருரு. குளிச்சானதும் காட்டெல்லாம் சுத்திசுத்தி அடிக்கிருரு. போதாக்கொறச்சலுக்கு, இந்த பழங்கள்லாம் தூக்கிக்கின்னு அங்கிருந்து வரனுமாம். அப்பாப்பா, போதும் போதும். அவ்வளவேலே போனு போவுதுன்னு செய்தா கூட, பசிவேலேக்கி ஒன்னும் போடமாட்டேன் ருங்களே. அந்தம்மாளே கேட்டா, இன்னும்மா, இப்பிடி செய்யிறிங்களே இன்னு, ரொம்ப உருக்கமா, அப்பா பூசமுடிய வேண்டாமா, இன்ருங்க. அந்தம்மா சொல்றத்த கேட்டா எனக்கும் பாவம், அப்டித்தான் செய்யட்டுமே இன்னு இருக்குது. பசிக்கிதே, அதுக்கின்னுசெய்யுறது?—ஆமாம் அத்தல்லாம் பாக்கக்கூடாது. பேசாதே இந்தப் பழங்கள்லே கொஞ்சம் துண்ணுடுரேன், அவங்க வர்ரத்துக்கு முன்னே. ஆமாங் அதாங் நல்லது—

[பழங்களே எடுத்து உரிக்கும்போது, சத்தியவான் அதைப்பார்த்தவண்ணமே ஓடிவருகிருன்.]

சத்—ஆஹா! சாரளா, என்ன அது?

சார—(பழங்களை மறைத்துக்கொண்டு) அடடா!—ஒன்னு மில்லியே.

சத்—அந்தக்கையில் இருப்பது என்ன ?

சார—(மற்ருேர்கரத்தில் மாற்றிக்கொண்டு) என்ன இருக்குது ?

சத்—இரண்டு கையையும் காட்டுவாய்.

சார—(பழத்தைக் கீழேவிட்டு) ஒன்னுமில்லியே.

ச—இந்தப்பழமேன் இங்குவந்தது ?

சார—(ஒருபுறமாய்) இதுக்கு இன்னு சொல்றது நானு ?

சத்—இப்படியா செய்கிருய் நீ? நான் சொல்லவில்லையா முன்பே, இவை பூசைக்குரிய பழங்கள் என்று ?

சார—ஆமாம் அத்தபாக்குறத்துக்குத்தான் நானுஉரிச்சேன்.

சத்—அதை என்ன பார்ப்பது நீ ?

சார—இல்ல, பூசக்கின்னு இருக்கிற பழங்களுக்கும் மத்த பழங்களுக்கும் உள்ள இன்னமான வித்தியாசம் இருக்குதான்னு பாக்கிலாமின்னு, உரிச்சேன்.

சத்—மடையன் நீ!—அப்பழங்களை நாம் தீண்டலாமா இப்போதே ?

சார—அதநீங்க அப்பவே சொல்லலியே. தொடக்கூடாதுன்னு சொல்லியிருந்தா, தெரியும்.

சத்—இதையுமா நான் சொல்லவேண்டும் உனக்கு ?

சார—இல்லிங்களா ? நான் காட்டிலே இருந்து எடுத்தாந்தேன கையாலே தொட்டுதானே எடுத்தாந்தேன். நீங்க அங்கியே கையாலே தொடக் கூடாதுன்னு சொல்லி யிருந்திங்கன்னு, எனக்கு ரொம்ப சந்தோஷமாச்சே.

சத்—அது என் அப்படி?

சார—கையால் தொடாதே, வாயாலே கடிச்சி, மூக்காலே வாசனே பார்த்துக்கினே வந்திருப்பேன்.

சத்—போதும், உன் வாயை மூடு. நான் சொல்கிறேன் இப்போது. பூஜைக்கென வைத்திருக்கும் பொருள்களில் ஒன்றையும் தீண்டலாகாது நீ. அப்படி தீண்டினுல் எனக்குக் கோபம் வரும்.

சார—எனக்கும் வந்துட்டுது.

சத்—என்ன உனக்கும் வந்துவிட்டது?

சார—பசி!

சத்—பசியா!—ஆம், பாவம்!—சாரளா, நீ வேண்டுமாஞல் பூசை முடிந்ததும், என் பாகத்திற்குரிய பழங்களேயும் எடுத்துக்கொள், தெரிகிறதா? இடையில் எதையும் தொடாதே.

சரா—இப்பதான் ரொம்ப பசிக்குது!—இன்னும் எத்தனே நாயி புடிக்கும் பூசே ஆவ?

சத்—இதோ விரைவில் ஆய்விடும்—எங்கே, சாவித்திரி இன்னும் வரக்காணேம்!

சார—அதோ அதோ வ்ராங்க அந்தம்மா!

[சாவித்திரி பூஜா திரவியங்களுடன் வருகிருள்.]

சத்—கண்ணே, என்ன இவ்வளவு நேரம்?

சா—ஒன்றும் இல்லே, பிராணநாதா. நான் பிரயாணப்படும்போது, மாமி ஸ்நாநம்செய்ய விரும்பினுர்கள். உடனே கிணற்றிலிருந்து நீர் கொண்டுவந்து, அவர்களுக்கு நீராட்டி, மிகவும் விரைவோடு வந்தேன்.

சத்—அப்படியா?

சார—அம்மணி. பசிக்குது!

சத்—இவன் ஒருவன்!—சாரளா, நீ பூஜை முடியும் வரையிற் பேசாமல் இருந்தால்தான், என்னுடைய பங்கையும் உனக்குத் தருவேன்.

சார—நான் பேசாமல் இருந்தால், என் வயிறு பேசாதே இருக்க மாட்டேனென்னுதே, அதுக்கு சொல்லுங்க.

சா—அப்பா, இதோ விரைவில் பூஜை முடியும். முடிந்ததும் பழத்தைக் கேள். என் பாகத்திற்குரிய பழங்களையும் தருகிறேன். நீமாத்திரம், அவர் தரும் பழங்களைப் பெறுதே, தெரியுமா?

சார—தெரியும் அம்மணி! உங்களுக்கு கொஞ்சம் பழந்தானே வரப்போவுது. ரெண்டு பேருங் கொடுத்திடுங்க, நானு ஒன்னுமுனு வயித்துக்கு சொல்லி பாக்கிறேன்.

சா—அப்பா, அப்படி கேளாதே. அவர் பசியுடன் இருப்பது நல்லதா!

சத்—கண்ணே, நீ மாத்திரம் பசியுடன் பட்டிணி கிடப்பது நல்லதோ?

சார—சரிதான், நீங்க ரெண்டுபேரும் இப்படி கேக்றதே பாத்தா, ஒருத்தர் பழமும் எனக்கு வராத வேல செய்யிறிங்கபோல இருக்குது—அம்மணி, பசிக்குது அம்மணி எனக்கு!

சா—இதோ வந்துவிட்டேன்.

[சாவித்திரி பூஜை செய்துகொண்டிருக்கிறுள்.]

சத்—சாரளா, இப்படிவா. நீ மிகவும் நல்லவனுயிற்றே. நான் சொல்வது போல செய்கிறுயா?

சார—செய்றேன், பசிக்குதே.

சத்—இன்னும் சிறிது நேரம் பொறுத்துக்கொள். சாவித்திரி, பாவம்! இந்த ஐந்தாறு தினங்களாய் வெறும் பழங்களை ஒரே வேளை புசித்து வருகிருள். என்ன சொல்கிருய்?

சார—இல்ல இல்ல, முதல்லே உங்க பழத்தெல்லாம் தின்னுட்டு, அப்புறம் அந்தம்மா பங்கே வாங்கிக்கிறேன்.

சத்—பார்த்தனேயா! அப்படி செய்யவே செய்யாதே. பாவம்! அவள் பசியுடன் பட்டிணி கிடப்பது நல்லதா?

சார—ஆமாம்—அந்தம்மாளுக்கு மாத்திரம் அவ்வள அக்கரையா கேக்றிங்களே, நானு இப்பிடி பசியா அழுவுறனே, அதுக்கு கேள்வி இல்லியே. இதாங், ஊர்லே எல்லாரும் பொண்டாட்டியதாங் உயிராதலமேலே வைச்சுக்கிறுங்க இன்னுங்களே, அதுசரியா இருக்குது.

சத்—அதற்காகவே, என்னுடைய பங்கையும் தருகிறேன் என்றேன்.

சார—சர்தான், உங்க பங்குதான் பெரிசி. நீங்க கொஞ்சமா எடுத்துக்கினகூட அந்தம்மா இன்னும் ரொம்ப உங்களுக்கு வைக்கிறுங்க. உங்க பங்கே கொடுத்திடுங்க போதும்—அம்மணி, பசிக்குது, சீக்கிரம் ஆவுட்டும் அம்மணி.

சத்—உஸ்! சாரளா! பார்த்தனேயா மறுபடியும்? இப்படி செய்தால், நான்—

சார—இல்ல, இல்ல, சும்மா இருக்கிறேன்.

சத்—இங்கு உட்கார்ந்திரு, நான் வருகிறேன்.

சார—எங்கபோறிங்க அங்கே? முன்னே எல்லாத்தியும் தின்னிட போறிங்களா?

சத்—இல்லை இல்லை. இதோ இக்கலசத்திற் சிறிது நெருப்பு கொண்டுவா.

சார—ஓஹோ! தெரியுமெனக்கு. என்ன அனுப்பிச்சிட்டு, நீங்கப் போறிங்களா தின்னுட? நீங்களும் கூட வாங்க?

சத்—செய், அப்படியே வருகிறேன். வா, போவோம்.

சா—பிராணநாதா, இஃதென்ன இது! நான் போய்க்கொண்டு வருகிறேன். தங்களுக்கேன் இந்த சிரமம்!

சத்—சாவித்திரி, சிரமம் என்ன இதில்?—நீ உன் பூசையைக் கவனி. இதோ நான் வந்து விடுகிறேன்—வா, சாரளா, நீ இருந்தாலும் பூசை நடை பெறுது.

[சாரளனுடன் செல்கிறான்.]

சா—ஆஹா! அம்பிகே! கௌரி! இவ்வளவு அருமையாய் என்னைக் காக்கும் இச்சுந்தர புருடரை எனக்குப் பிராணநாதராக அளித்த உன் இணையடிகளை நான் மனமார எண்ணி வாயார வாழ்த்துகிறேன். அம்மணி, தம்முடைய பாதார விந்தமே பற்றெனப் பற்றிய இவ்வடியாள், இதுபோலவே, நீடித்துவாழ இன்னருள்புரியும். மனோன்மணி! மங்கையர்க்கரசி! என் தாயே! நின் இணையடியைப் போற்றுவார் ஒரு கவலையும் இன்றி உளக்களிப்புடன் வாழ்வார் அன்றோ? மஹேஸ்வரி, உனது இன்னருளை உன்மகளாம் என்னிடத்தும் சிறிது காட்டுவாய். ஜகதீஸ்வரி! நீ உன் பக்தரை நோவ உரையாய், நோவக்கண் பார்த்திடாய், சாவ நினையாய், தளரவிடாய் என்ற உண்மையை அறிந்தே, உன்னை அடைக்கலம் என அடைந்தேன். ஜகதாம்பிகே, நான் இதுவரை தெரிந்தும், தெரியாமலும் ஏதேனும் பிழைகள் செய்து

இருந்தாலும், அவற்றை எண்ணாது, அடியாள் சுமங்கிலியாய் என் கொழுநருடன் கூடிவாழும் பெரும் பாக்கியத்தை எனக்கருள் செய்வாய்! தஞ்சம் என்று அடைந்தோரை அஞ்சேல் என்று ஆதரிக்கும் அம்மணி! இவ்வேழைக்கு என்பிராண நாதரும் நீயுமே கதியாகும். தேவி! நாராயணி! சாம்பவி! சற்று மனம் இரங்கி அருள்புரிவாய்! அருள் புரிவாய்! (21)

[சத்தியவான் கலசத்தில் நெருப்பைக் கொண்டு வருகிறான்.]

பிராணநாதா, என்ன அபசாரம் செய்கிறேன் நான்! மன்னிக்க வேண்டும் அடியாளை.

சத்—சாவித்திரி, மன்னிப்பதாவது உன்னை! அவற்றை எல்லாம் எண்ணாதே இப்போது.

சா—ஆக்ஞையின்படி பிராணநாதா.

[தூபகலசத்தைப் பெற்றுப்போய், ஆராதனை செய்து ஸ்துதி செய்கிறாள். சத்தியவானும் ஓர் புறமாய்க் கௌரியை வணங்கி நிற்கிறான்.]

விருத்தம்.

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
　புராந்தகித்ரியம் பகியெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சசஸ்ரதள
　புட்பமிசை வீற்றிருக்கு
நாரணி மனாதீத நாயகி குணாதீத
　நாதாந்த சத்தியென்றுன்
நாமமே யுச்சரித் திடுமடியர் நாமமே
　நானுச்சரிக்க வசமோ
வாரணி சடைக்கடவுளாரணி யெனப்புகழ
　வகிலாண்ட கோடியீன்ற

அன்னையே பின்னையும் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூபமயிலே
வாரணியு மிருசெங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவையரசே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலே
வளர்காதலிப் பெண்ணுமையே.

[வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து மறுபடியும் சத்தியவான் பாதத்தில் வீழ்கிருள்.]

சத்—கௌரியின் பூரணகிருபை உண்டாகுமாக உனக்கு! எழுந்திருப்பாய்!

சா—(எழுந்து, சத்தியவான் முகத்தைக்கண்டு தனக்குள்) அந்தோ! ஈஸ்வரி! இன்னும் இரண்டு நாள் சென்றதும், இவ்வழகிய முகார விந்தத்தை எங்ஙனம் காணப் போகிறேன்!

சத்—என்ன! என்ன! சாவித்திரி, என்ன திடீரென உன் முகம் வேறுயது!

சா—விசேஷம் ஒன்றும் இல்லே, பிராணநாதா.

சத்—கண்ணே, மறைப்பானேன் எதையும்? உரைப்பாய் என்னிடம். என்ன விசேஷம்?

சா—ஏழை மறைப்பதற் கென்னவுண்டு தம்முன்!—பிராணநாதா—

சத்—என்ன, சாவித்திரி! ஏன் இப்படி வாட்டம்கொண்டு வருந்துகிருய்? நான் ஏதேனும் உனக்கு மாருக நடந்தேனு? கண்ணே சொல் அதையாவது நான் அறிய. அல்லது, கொண்டுவந்த பூஜா திரவியங்களில் ஏதேனும் குறைவுபட்டதோ?

சா—(ஒருபுறமாய்) அந்தோ! நான், பூசைசெய்வதன் காரணத்தை முன்னமவர் கேட்டபோது, அது எங்கள்

குலவழக்கம் என்று ஓர் பொய் சொல்லிவிட்டேன். இப்போது என்ன சொல்வது?

சத்—கண்ணே, சாவித்திரி, என்னிடம் சொல்வதற்கென்ன எதையும்?

சா—ஒன்றும் விசேஷம் இல்லை பிராணநாதா. தாம் மாத்திரம் அடியாள் கேட்கும் ஓர் வரத்தை அருள்செய்ய வேண்டும்.

சத்—அப்படியே யாகட்டும். அதற்கென்ன? நீ எதை வேண்டுகிறாய், சொல். இப்போதே, அதைச்செய்து முடிக்கிறேன்.

சா—(வாடிய முகத்துடன்) பிராணநாதா—(கண்ணில் நீர் அரும்புகிறது.)

சத்—கண்ணே, என்ன மறுபடியும்! அந்தோ! நான் அப்போதே சொல்லவில்லையா உனக்கு; நீ இச்சண்டாளனை மணம்செய்து கொள்வதால், செய்யத் தெரியா வேலைகளை யெல்லாம் செய்து, வாடி வருந்தவேண்டும் என்று?

சா—பிராணநாதா! பிராணநாதா! இஃதென்ன வார்த்தை? நான் என்ன இப்போது அபாரமான வேலைகளைச் செய்கிறேன். தங்கள் பணிசெய்யும் பாக்கியம் பெற்றதனால் அன்றோ அடியாள் கிருதார்த்தை யாயினேன்—பிராணநாதா, தாம் அதைப்பற்றி எல்லாம் எண்ணவேண்டாம். தயை செய்து நான் கேட்ட வரத்தை, நான் மீட்டும் வேண்டும்போது அருள் செய்யவேண்டும்.

சத்—கண்ணே, நீ அதை மீட்டும் மீட்டும் கேட்க வேண்டுமோ?

[சாரளன் ஓடி வருகிறான்.]

சார—பழம்! பழம்! எனக்குபழம்! தின்னுட்டிங்களா நீங்க ரெண்டு பேரும்?

சா—அப்பா, வேண்டிய பழங்கள் இருக்கின்றன. என் பிராணநாதருக்கு மாத்திரம் சிலபழங்களை வைத்து விட்டு, மிகுதியை நீ எடுத்துக்கொள்.

சத்—என்ன சாவித்திரி! நீயோ விரதத்தால் இளைத்துக் களைப்படைந்திருக்கிறாய்—அடே! அடே! அவனைப் பார், எல்லாவற்றையும் எடுத்து வைத்துக் கொண் டான்.

சார—நீங்க வாங்க நான் தரேன், ரெண்டுபேருக்கும். பசிக்குது எனக்கு, நீங்க இங்கிருந்துக்குனு பேசிக் குனு இருக்கிறிங்களே. வரிங்களா, இல்லையா?

சத்—சாவித்திரி, வா போவோம். இல்லாவிடின், அவன் எல்லாவற்றையும் தின்று விடுவான்.

சார—வாங்க சீக்கிரம் பசிக்குது.

சத்—இதோ வந்து விட்டோம்.

[மூவரும் போகிறார்கள்.]

---

## இரண்டாமங்கம்—இரண்டாங்களம்.

களம்: காடு—காலம்: முற்பகல்

சா—அந்தோ! இன்றன்றோ நாரதர் கூறிய இறுதிநாள்!—அம்பிகே! இவ்வேழையைக் கண்பார்த்தருள்வாய்! உன்னையே உறுதியாம் துணையென உளத்தே கொண் டுள்ளேன். ஈஸ்வரி! மஹேஸ்வரி! நித்திய மாங்கல்யதாரணி! தயாபரி!—ஆஹா! நான் எப்

படி இன்று என் நாதரைத் தனியே விட்டிருக்க மனம் துணிவேன்! அவர் எப்படியும் வழக்கம்போல், இன்றும் காய்கனி கிழங்குகள் கொண்டுவரக் கானகம் செல்வார். ஆம், அவரை இன்று தனியாக அனுப்பவொண்ணுது. அவர் போம்போது, நானும் அவரைப் பின்பற்றிச் செல்லவேண்டும்—அவர், நீஏன் என்னுடன் வருகிருய் என்று கேட்டால், நான் என்னசொல்வது!—இல்லை, முதலில் நானே அவரைக் கேட்டுக்கொள்கிறேன், கானகம் அழைத்துப்போம்படி—அந்தோ! அவர் உன் மாமி மாமன்மாருக்குத் துணையாய் இரு என்றுசொல்லிச் சென்ருல் என்னசெய்வது!—ஆம், அவர் அன்றளித்த வரத்தின்படி நடப்பார், நான் தெரிவித்துக் கொண்டால்—அதோ வருகிருர் அவர். வந்ததும் நானே முதலிற் கேட்டு விடுகிறேன்.

[சத்தியவான் வருகிருன்.]

0-12 MKP.S N18

பிராணநாதா வரவேண்டும்.

சத்—கண்ணே, நான் கானகம்சென்று, கடிதினில் வருகிறேன். போய் வரட்டுமா?

சா—பிராணநாதா—தாம் அன்றளித்தவரத்தை இன்று முற்றுவிக்க வேண்டுகிறேன்.

சத்—ஆஹா! அப்படியே ஆகட்டும். என்ன அதுசொல்?

சா—தாம் அடியாளையும் இன்று தம்முடன் கானகம் அழைத்துத்துச் செல்லவேண்டும்.

சத்—என்ன! சாவித்திரி, கானகத்திற்கா?

சா—ஆம், பிராணநாதா, தாம் எப்படியும் தந்த வரத்தின்படி அழைத்துச் செல்ல வேண்டுகிறேன் அடியாளை.

178552

சத்—கண்ணே, உன்னை அழைத்துக் கொண்டு போக ஒரு ஆக்ஷேபமும் இல்லை. ஆயினும் நான் சொல்வதைக் கேள். அக்கொடுங் கானகத்தே நீ வருவது உனக்கு அசாத்தியமாகத் தோன்றும். ஏன் வீணே கல்லு முள்ளும் உருத்தும் கடும் வனத்தே என்னுடன்வந்து கஷ்டத்துக்குள்ளாக எண்ணுகிறாய்?

சா—பிராணநாதா, அடியாள் தம்முடன் இருக்கும்போது எனக்கு ஒரு கஷ்டமும் தோன்றாது அடியாள் புனக் கிளிகளையும் பூங்காவில் புஷ்பித்துள்ள புஷ்பங்களை யும் கண்டு மகிழ்வெய்திடத் தாம் கிருபை செய்யும் பிராணநாதா. (22)

சத்—சாவித்திரி, உன்னால் அவ்வளவு தூரம் நடந்துவர முடியாதே. கண்ணே, பஞ்சில் மிதிக்கினும் விஞ்சச் சிவந்திடும் உன் கஞ்சச் சீறடிகள், அக்கடுங்கானிற் படத்தரியாவே. மேலும், அவ்விடத்தில் ஒரு பக் கம் புலிகளும், ஒரு பக்கம் சிம்பமும் ஓடித்திரிவ தைக் கண்டால், நீ மிகவும், அஞ்சுவாய்.

சா—பிராணநாதா, அடியாள் தமது வார்த்தையை மறுத் துரைப்பதற்காக மன்னிக்கவேண்டும். தம்முடன் வரும் அடியாள் அத்துஷ்ட மிருகங்களுக்குச் சற்றும் அச்சம் கொள்ளேன். தாம் இன்று அழைத்துச் சென் றால், அடியாள் கானப்புட்கள் களிப்புடன் ஆடிப் பாடுவதையும், தவ சிரேஷ்டர்களின் திவ்ய தரிசனத் தையும் கண்டு, தன்னியையாவேன்.

சத்—அந்தோ, கானகத்தருமையால் அன்றோ, கண்மணி நான் உன்னை அழைத்தேக அஞ்சுகின்றேன். கண் ணே! உன்னால் இக்கடும் வெயிலில் நடந்துவர முடி யுமோ! முடியாதே! சாவித்திரி, நீ வெயிலில் வெதுப்

புற்று வெய்துயிர்ப்பதைக்காண என்மனம் சகியாதே!

சா—பிராணநாதா, தாமே தினந்தோறும் அக்கொடும் வனத்தேபோய் இத்தகைய கஷ்டங்களை அனுபவித்து வரும்போது, தங்கள் பணிப் பெண்ணுகிய நானே-அக்கஷ்டங்களைப் பாராட்டா திருப்பது கடினம்? தாம் அவற்றை எல்லாம் எண்ணுதீர், பிராண நாதா.

சத்—கண்ணே, எனக்குக் கானகம் செல்வது, கனிதரும் சோலையிற் செல்வது போலாயிற்று, வழக்கத்தால். உனக்கப்படி அல்லவே, ஒரு பக்கம் கல்லும் ஒரு பக்கம் முள்ளும் உருத்த நீ கதறுவாயே, கண்மணி!

சா—பிராணநாதா, தாம் போம் வழியில் அடியாளும் நடந்து வந்தால், அவ்விடத்தில் இருக்கும் கல்லும் முள்ளும் புஷ்பமெத்தையைப் போலன்றே காணும்?

சத்—கண்ணே, நான்சொல்வதைக்கவனி. உன்னை அழைத்துக்கொண்டு போகவேண்டும் என்று எனக்கு மனம் இல்லை என்று எண்ணுதே. நான் அக்கஷ்டங்களைப் பட்டுப்பட்டிருப்பதால் இங்ஙனம் தடுத்துரைக்கிறேன். நீ என் உன்மெல்லிய தேகத்தை வீணுய் வாடி வதங்கச் செய்யவேண்டும்! என்னுல் நீ இப்போது படுங்கஷ்டங்கள் போதா என்றே, இன்னும் பலவாய துயருக்கு ஆளாக எண்ணுகிருய்?

சா—பிராணநாதா, அடியாள் தம்முடன் இருக்கும் பாக்கியம் பெற்றேன் என்றன்றே பரமானந்தம் அடைந்துள்ளேன். அங்ஙனமாகத்தாம் அடியாள் கஷ்டங்களை அனுபவிக்கிறேன் என்று சொல்லலாமோ? பிராணநாதா, அடியாள், கானகத்தே வாழ் முனி

சிரேஷ்டர்களையுங் கண்டு தரிசிக்கவேண்டு மென்று பலநாளாக ஆசை கொண்டிருந்தேன். அதுபற்றியே, தம்மை இப்படி வற்புறுத்துகிறேன். தாம் தடையாது அழைத்துச் செல்லவேண்டும் அடியாளை.

சத்—அப்படியே ஆகட்டும். இன்றுவேண்டாம்; மற்றோர் நாள் உன்னை அழைத் தேகுகிறேன்.

சா—இல்லை, பிராணநாதா. அடியாள் இன்றே தம்முடன் வர அநுக்ரஹிக்க வேண்டும். ஏழை மறுத்துரைக் கிறேனென்று, கோபம் கொள்ளலாகாது.

சத்—கோபம்என்ன இதில்? கண்ணே, நான்எதற்காக இன்று வேண்டாம் என்று கூறினேன்; தெரியுமா?

சா—தெரியும், நான் தம்முடன் வருவதால் எங்கே கஷ்டங்களுக் குள்ளாகிறேனோ என்று, போக்காக மற்றோர்நாள் ஆகட்டும் என்று சொல்கிறீர்: அப்படியாவது நான் மறந்து விடுவேன் என்று.

சத்—என்னசாவித்திரி, இப்படிஎல்லாம் எண்ணுகிறாயே! நான் அதற்காகவா அங்ஙனம் உரைத்தேன்?

சா—மற்றெதற்காக பிராணநாதா?

ச—கண்ணே, நீயோ கௌரி விரதம் அநுஷ்டித்துக் களைப்படைந்திருக்கிறாய். மேலும், நேற்று முழுவதும் உணவின்றி வாட்டம் அடைந்துள்ளாய். நீ எங்ஙனம் இந்த நிலைமையில் கானகம் வரமுடியும்? சாவித்திரி, நான் சொல்வதைக்கேள். நீ இன்று உன் பாரணையை முடித்துக்கொள். நாளைபதினம் உன்னை உன் இஷ்டம்போல் அழைத்தேகுகிறேன்.

சா—பிராணநாதா தவசிரேஷ்டர்களைத் தரிசித்து வந்தபின் பாரணை முடிக்கப் பிரியங் கொண்டதாற்றான்,

அன்றே இதை மனதில் வைத்துக்கொண்டு, தம்மிடத்தில் அவ்வரத்தைப் பெற்றேன். ஆகையால், அடியாள் கருத்து நிறைவேறும் வண்ணம், தாம் கடைக்கணித்தருளும்.

சத்—கண்ணே, நான் என்ன சொல்லியும் கேளேன் என்கிறாய். நான் என்ன செய்வது! இதுபற்றித்தான் முன்னமே என்னிடம் வரம் கேட்டுக் கொண்டாய் போலும்! உன் இஷ்டம்.

சா—பிராணநாதா, வெறுப்புடன் அடியாளை அழைத்தேக வேண்டாம். வற்புறுத்தினேன் என்று அடியாள் மீது கோபம் கொள்ளாது, தங்கள் இஷ்டத்தின்படி செய்யுங்கள். ஏதோ அடியாள் கோரிக்கையை எடுத்துரைத்தேன்.

சத்—சாவித்திரி என்னை எதுவிஷயத்திலும் வற்புறுத்திக் கேளாத நீ, இன்று இங்ஙனம் இரந்து வேண்டியும், நான் உன்னை அழைத்தேகாமல் இருப்பது நல்லதல்ல—உன் இஷ்டத்தின்படி அழைத்தேக, எனக்கோர் ஆக்ஷேபணையும் இல்லை—ஆயினும்—

சா—இன்னும் என்ன பிராணநாதா?

சத்—உன் மாமி மாமன்மார் என்ன உத்தரவு செய்கிறார்களோ அதன்படி அன்றோ நடக்கவேண்டும்?

சா—அவர்களை நான் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

சத்—அதுவே யான் வேண்டுவது. அவர்கள் என்ன சொல்கிறார்களோ, அதன்படியே செய்.

சா—அப்படியே பிராணநாதா—ஆயினும், தாமும் சற்று அருகில் இருந்து, அவர்களுக்குத்தேறுதல் சொல்ல வேண்டும். இல்லாவிடின் தாம் கூறியதுபோலவே அவர்களும் சொல்வார்கள்.

சத்—உனக்குமா அவர்களிடம் சிபார்சு செய்ய வேண்டும் நான்? நான் வேண்டியதே இல்லை. உன்மாமி போதுமே உனக்கு. அந்த அம்மாள் தான் நீ எதைக்கேட்கினும் அப்படியே செய் என்கிறார்களே, நான் எதற்காக?

சா—அப்படி அல்ல, பிராணநாதா. தாமும் அருகிருந்தால் நலமாய் இருக்கும்.

சத்—ஆம், அப்படியே ஆகட்டும். நீ போய்க்கேள்.

[இருவரும் செல்கின்றனர்.]

---

## இரண்டாமங்கம்—மூன்றாங்காட்சி.

களம்: எமதருமன்கோலுமண்டபம்.—காலம்: முற்பகல்.

[எமதூதர்கள் சூழ்ந்திருக்க, எமதருமன் கொலு அமர்ந்திருக்கிறான். சித்திரகுப்தன் புறமாய் இருந்து கணக்குப்புத்தகத்தைப் பார்த்தவண்ணமாய் நிற்கிறான்.]

எ—சித்திரகுப்தா, எல்லாம் வல்ல இறைவன் ஆணையின்படி நடக்கும் எனதுதூதர்கள், பூலோக, புவலோக, சுவலோக ஜனலோக, தபோலோக, மஹாலோக, சத்தியலோகம் என்னும் மேலேழுலகங்களிலும், அதல, விதல, சுதல, தராதல, ரஜாதல, மகாதல, பாதாள மென்னும் கீழேழ் உலகங்களிலும் உள்ள கொடும் பாதகர்களை என் ஆஞ்ஞையின்படிக் கண்ட கண்ட இடத்துப் பிடித்துப் பாசக்கயிற்றா லவருயிர்களை முடித்துக் கொண்டுவரும் தொழில்களைச் சரிவரச்செய்து வருகின்றார்களா?

சி—ஐயனே, அங்ஙனே அவரவர்கள் தங்கள் தங்கள் வேலையில் குறைவு வாராதபடிச் சரியாய்ச்செய்து வருகின்றனர்.

எ—சபாஷ்!— சித்திரகுப்தா, முன்னொருமுறை நாம் இறைவன் அடிமலரைப் போற்றும் மார்க்கண்டனுக்கு இழைத்ததீங்கால் நேர்ந்த பெரும்விபத்தை அறிந்துளோ மல்லவா? ஆகவே, நமது தூதர்கள் அதுவிஷயத்தில் அதிகஞாபகம் உடையவர்களாய் இருக்கவேண்டும். பரமனடியவர்களிடத்தில் என் கட்டளைமீறித் தங்கள் அட்டகாசத்தைக் காட்டுவரானல், திட்டமாய்க் கட்டி அவர்களை வெட்டிச் சிதைப்பேன்—தூதர்களே, தெரியுமா?

தூதர்கள்—தெரியும், தெரியும்,

எ—சபாஷ்!—சித்திரகுப்தா, இன்று நாம் செய்யவேண்டிய வேலைகள் என்ன என்ன?—அஃதிருக்கட்டும். நேற்று நான் கூறியபடித் தூதர்கள், பிரமன் விதித்த நாட்கள் நேற்றோடு முடிவுபெற்ற உயிர்களை அழைத்துக் கொண்டுவந்திருக்கின்றார்களா?

சி—எல்லோரையும் அழைத்துக்கொண்டு வந்துள்ளனர்.

எ—நல்லது, முதலில் அவர்களை விசாரித்து விடுவோம். ஒவ்வொருவராக அழைப்பாய், இவ்விடம்.

சி—அடே தேள்கொடுக்கு, நான் சொல்லும் பேர்வழிகளை எல்லாம் அழைத்துக்கொண்டுவா — கணபதி தீக்ஷதர்!

[தூதன் போய்க் கணபதி தீக்ஷதரைக் கொண்டு வருகிறுன்.]

எ—சித்திரகுப்தா, இவனுடைவிஷயம் என்ன?

சி—ஐயனே, இவனே தில்லை மூவாயிரவர் வம்சத்தில் உதித்தவன், ஶ்ரீநடராஜருக்குத் திருத்தொண்டு செய்யவேண்டியது இவன் வேலை. அங்ஙனமாக, தன் வேலையைமறந்து, தாசி லோலனாய், கள்ளும் சாராயத்தையும் கலந்துகுடித்து அதிலும் போதை இல்லை என்று, கஞ்சாவையும் கலந்துண்டு, கட்டிய ஆடை அவிழ்வதும் தெரியாமல், சிதம்பராலயத்திலேயே நிர்வாணமாய் ஆடி அலைந்த படுபாவி இவன்.

எ—இன்னும் இச்சண்டாளன், எவ்வெத் தீங்குகளைச் செய்திருக்கின்றான் பார்.

சி—ஐயனே, அத்தில்லையம்பதிக்கண்வரும் சிவனடியார்களை ஏமாற்றி, அவர்கள் பெயரால்சுவாமிக்கு அருச்சனை செய்வதாய்க்கூறி, அவர்கள் பொருளனைத்தையும் கள்ளும் சாராயத்திற்குமே அழுதவன்.

எ—ஆஹா! அடே பாதகா! எழிலுற்ற புவியதனிற் பழியுற்ற படுபாவி! சற்றும் நான் ஒருவன் இருக்கின்றேன் என்ற எண்ணம் இன்றியா, நம்பனுக்கும் நம்பன் அடியவர்களுக்கும் துரோகம் நினைத்தாய்? காதகா, உன்னைப் பல்லாயிரம் வருடம் பாம்பும்தேளும் பதைக்கவாட்டும் பாழ்நரகிற் றள்ளினேன். கொண்டு செல்லுங்கள் இவனை.

சி—ராமசாமி ஐயங்கார்!

[தூதர் கணபதி தீக்ஷிதனைக்கொண்டு போகிறார்கள். ஓர்தூதன் ராமசாமி ஐயங்காரைக் கொண்டுவந்து நிறுத்துகின்றான்.]

எ—இவன் செய்த தவறுகள் என்ன?

சி—ஐயனே, இவனே சாதியிற் பிராமணன். இவன் தன் குலதர்மத்தை மறந்து, பணம் ஒன்றையே புகழ்ந்து

தன்மகளை மணம் செய்து கொள்வோனுக்கு அதிக திரவியம் கொடுப்பதாய்க் கூறிய ஒரு பறையன் மகளை விவாகம் செய்து கொண்டவன்.

எ—சண்டாளன்! சண்டாளன்! இவனைப்பார்த்தலும் தவறாகும். அடேபாவி, நீ பன் மறையோதும் பார்ப்பனக் குலத்துதித்தும் பறையன் மகளை மணந்ததால் பழுத்த இரும்பின் பாவையைத் தழுவுவாய், பதினாயிரவருடம்.

சி—சங்கர ஐயன்!

[தூதர்கள் ராமசாமி ஐயங்காரைக் கொண்டு போகிறார்கள். மற்றொரு தூதன் சங்கர ஐயனைக்கொண்டு வருகிறான்.]

ஐயனே, இவனுக்குள்ள பத்து விரலும் பத்துக் கன்னக்கோலாகும். எந்நேரமும் இவன் மடியில் இருப்பது கத்தரிக்கோலே. சந்தைகளில் சமயம் பார்த்து, முடிச்சுகளைக் கத்தரித்துக் கொண்டு போய்க் கள்ளுக் கடைகளுக்கு அவற்றை ஒழிப்பது தான் இவன் வேலை. அன்றியும், பிராமணனாயிருந்தும் இவன் தின்னாத மாம்சவகைகளே இல்லை. தினந்தோறும் மாட்டிறைச்சியே இவனுக்கு மனமுவந்த உணவு.

எ—அடே! பிராமணனாய்ப் பிறந்தும் பேருலகில் புலையரினும் கடையனாய் ஒழுகிய நீ பத்தாயிரம் வருடம் ஒழுகக்காய்ச்சிய இரும்பை உணவென உட்கொண்டு, பின் மலத்தை யுண்ணும் பன்றியாய் உழலக்கடவாய். போ, நில்லாதே.

சி—துரைசாமி ஐயன்!

[தூதர்கள் சங்கர ஐயனைத் தள்ளிக்கொண்டே போகிறார்கள். மற்றொருவன் துரைசாமி ஐயனைக்கொண்டு வருகிறான்.]

எ—இச்சண்டாளன் விஷயம் என்ன?

சி—ஐயனே, இவன் சைவ பிராமணன். வேலையோ சிவன் கோவில் மணியம். வைத்திருந்த கூத்தியாரோ துலுக்கத்தேவடியாள். கோயிலுக்குவரும் ஊதியம் எல்லாம், இவனுக்குத்தான் சொந்தம். கோயிலில் சுவாமிக்கு நைவேத்திய மில்லாவிட்டாலும், ரேஷம்பி அம்மனுக்கு நைவேத்தியம் இல்லாதநாளே இல்லை. கோயில் நந்தவனத்தி லிருந்துபோகும் புஷ்பங்களைச் சுவாமி முடியிற் பார்க்காவிட்டாலும், அந்தத் துலுக்க அம்மன் கொண்டையிற் பார்க்கலாம்.

எ—பரமசண்டாளன்! பரமசண்டாளன்! கொண்டுபோய் இவனை இருபதாயிரம் வருடம் இருப்புலக்கையால் குத்துங்கள். சண்டாளா, சற்றும் குலதர்மத்தை எண்ணாது, கொடுந்தொழிலைச்செய்த நீ பெண்நாயாய் உழலக் கடவாய்.

சி—மாடசாமி ஐயன்!

[மாடசாமி ஐயனை அழைத்து வருகிறார்கள்.]

எ—மாடசாமி ஐயனு, உன்பெயர்.

மா—ஐ—ஆமாங்க.

சி—ஐயனே, இவன் ஏழைகள் வயிற்றை எல்லாம் அடித்தவன். இலஞ்சம் வாங்குவதில் மிகவும் பேர்போனவன்.

எ—அப்படியா! அடே, நீ ஐந்நூறுவருடம் அக்கினி திராவகத்தை உட்கொள், போ.

[தூதர்காள் மாடசாமி ஐயனைக்கொண்டு போகிறார்கள்.]

சி—தனபதிசெட்டி!

[தனபதிசெட்டியை ஓர் தூதன் அழைத்துக்கொண்டு வருகிறான்.]

ஐயனே, இவன் மஹாதுரோகி. ஊராருடமைக்குப் பிள்ளையாய்ப்பிறந்தவன். இவன்கடையில் நெய் என்று வருபவர்களுக்கு, கொழுப்பைத்தான் நெய் என்று விற்பது. எடைபோடுவதில் இவன் ஐந்து விரல்களும் வேலைசெய்யும். நூற்றுக்கு நூருக லாபம் சம்பாதித்தவன்.

எ—இந்தச் சண்டாளனை அரணைக்குழியில் ஆயிரவருடம் உருட்டுங்கள்.

சி—ம—கா—வ—சி—சுந்தரம் செட்டி.

[சுந்தரம் செட்டியை அழைத்து வருகிருர்கள்.]

எ—இவன் எத்தகைய சண்டாளன்?

சி—இவனு? வட்டி வாங்குவதில் இவனைப் போன்ற இரக்கம் அற்றபாவி எவனுமே இரான். நூற்றுக்கு எழுபத்தைந்து விகிதம்வட்டி வாங்கினவன். இவனுல் முழுகிப்போன குடும்பங்களுக்கு அளவே இல்லை. அன்றியும், சிவபுண்ணியம் செய்கிறேன், சிவபுண்ணியம் செய்கிறேன் என்று, புதை பொருளுக்காய், பழைய கோயில்களை எல்லாம் இடித்துத்தரை மட்டமாக்கி, அதனுல் தன்னினத்தவராம் சிவனடியார்களுக்கும் கெட்ட பெயரை விளைவித்தவன்.

எ—அடே, பரமனுக்கே துரோகம் செய்ய எண்ணிய சண்டாளா! இன்னும் நீ என்ன என்ன தீங்கினைச் செய்ய மனம் துணியாய்? நீ இருபதினுயிரம் யாண்டு முள் பீப்பாயில் கிடந்துழல்போ.

[தூதர்கள் அவனைக்கொண்டு போகிருர்கள்.]

சி—அண்ணுமலை முதலி!

[அண்ணுமலை முதலியைக் கொண்டு வருகிர்கள்]

ஐயனே, இவன் கிளியைப்போன்ற அழகான மனைவியை வீட்டில்தனித்தழவிட்டு, குரங்கைப்போன்ற, கோனவாய் குப்பி என்னும்தாசியின் தாசனய் இருந்தவன். படுபாவி, தன் மனைவியின் மீதிருந்த ஆபரணங்களை எல்லாம் விற்று விற்று, அந்தக் குப்பியின் குலேக்கே கொட்டினவன். போதாக்குறைக்கு, தன் மனைவியின் கழுத்தில் மிகுந்திருந்த தாலியையும் விற்று, அந்தத் தாசிக்குச்சவ்வாது பூனை வாங்கித்தந்தவன்.

எ—சீ சீ! இப்பாவியைக் கொண்டுபோய்ப் பத்தாயிரம் வருடம், அக்கினிக் குழியில் இருக்கத் தள்ளுங்கள்.

சி—செஞ்சிபிள்ளை!

[தூதர் கொண்டு போகிறார்கள். ஒருவன் செஞ்சி பிள்ளையைக்கொண்டு வருகிறான்.]

எ—உம், இவன் என்ன என்ன செய்தான்?

சி—ஐயனே, இவன் தன் பெண்டாட்டியின் வார்த்தையைச் சிரசாகக்கொண்டு, உடன் பிறந்த சகோதரரையும் பெற்றோரையும் மருட்டியோட்டியவன். அன்றியும், அந்த மனைவியின் தலையணை மந்திரோபதேசத்தால், விதவையானதன் தங்கையின் பொருளை அபகரித்துக் கொண்டதுடன் அவளை வீதியில் அலையவிட்..வன்.

எ—அடே, நாயினும் கடைபோன நாயே! இக்கொடுங் காரியங்களைச் சற்றும் இரக்கம் இன்றிச் செய்த உன்னை இலேசில் விடப்படாது—தூதர்காள், இவனைக்கொண்டு போய் அக்கினித் தூணில் கட்டி அடித்து, ஈயத்தைக் காய்ச்சி இவன் வாயிலும், காதிலும் ஊற்றி ஐயாயிர வருடம் அருநரகில் வீழ்த்துங்கள்.

சி—சங்கம்மா !

[தூதர் சங்கம்மாளைக்கொண்டு வருகிறார்கள்,]

ஐயனே, இப்பாவி தன் கணவனை வேண்டுமென்றே விஷம் இட்டுக்கொன்று வேறொருவனுக்கு வாழ்க்கைப்பட்டவள்.

எ—இப்பாதகியைக் கொண்டுபோய்ப் பதினாறாயிர வருடம் பழுக்கக்காய்ச்சி ஊற்றிய இரும்புத் தொட்டியிற் கிடத்துங்கள்.

சி—முத்தம்மாள் !

[முத்தம்மாளைக் கொண்டு வருகிறார்கள்.]

எ—இவள் எத்தகையாள், சித்திரகுப்தா ?

சி—ஐயனே, இவள் காமனை ஒத்த அழகுடைய கணவன் உயிருடன் இருந்தும் அவன்மீது பக்ஷம் இன்றி, அண்டைவீட்டுக் கோரன் மீது மனநாடிய மாபாவி.

எ—ஏ பேதாய் ! உன்னை ஒத்தகொடும் சண்டாளிகளைச் சித்திரவதை செய்வதே மேலாகும் தூதர்காள், இவளைக்கொண்டுபோல் எழுபதாயிரம் வருடம் ஈட்டியாற் குத்துங்கள்.

சி—சின்னம்மாள் !

[தூதர் சின்னம்மாளைக் கொண்டு வருகிறார்கள்.]

ஐயனே, இந்தப் பெண்ணிற்குப் பிறந்த பொழுதிலிருந்து திருடுவதே பெரியவேலை. இவள் குழந்தையாய் இருக்கும்போது, மற்றைய குழந்தைகளுக்கென வைத்திருந்தபாலை எல்லாம் குடித்து விட்டவள். தத்தி நடக்கும் பருவத்தில், அருகில் இருக்கும் குழந்தைகள் உண்ணும் பக்ஷணங்களைப் பதைக்கப் பதைக்க வாயிலிட்டுக் கொண்டவள். பெரியவள்

ஆனபின் சொல்ல வேண்டியதே இல்லை. சுருங்கச் சொல்லு மிடத்து இவளைப் பிடித்து அடிக்காத மீன் கடைக்காரி, துடைப்பக் கடைக்காரியே இல்லை, இவளிருந்த ஊரில்.

எ—ஆஹா! இவள் பத்து விரலுக்கும் பந்தம் சுற்றிப் பத்தாயிரம் வருடம் அவற்றைக் கொளுத்துங்கள்.

சி—தாசிமீனு!

[தாசி மீனுவைக் கொண்டு வருகிறார்கள்.]

ஐயனே, இவளால் கெட்டுப்போன குடிக்கு அளவே இல்லை. இவளுக்குத் தெரியாத வசிய மருந்து, எவ்வுலகிலும் இராது. தன்னிடம் வருபவர்களை எல்லாம் தன் வலையிற் சிக்கச்செய்து, அவர்களைத் தன் கைக் குரங்கெனச்செய்யும் கொடும்பாதகி இவள். இவள் வைத்த வசிய மருந்தால், சுமார் நூறுபேர்மாண்டனர். கோயிலிற்போய் கீர்த்தனம் செய்யும்போது கூட, இவள் கண்ணெல்லாம், கொழுத்த கடாக்கள் வந்திருக்கின்றனவா என்று பார்ப்பதிலேயே.

எ—பாதகி இவளைப் பதினையாயிர வருடம் பாழ் நரகில் ஆழ்த்துங்கள்—ஏ பேயே, நீ இறுதியில் கண்இழந்த பெட்டைக் குரங்காய்ப் பிறந்துழல்.

[தூதர் அவளைக் கொண்டு போகிறார்கள்.]

இன்னும் எவரேனும் இருக்கின்றார்களோ?

சி—இன்னும் இரண்டொருவர் இருக்கின்றார்கள். ஐயனே—லோகேசன்!

[லோகேசனைக் கொண்டு வருகிறார்கள்.]

எ—இவன் என்ன தவறு செய்தான்?

சி—ஐயனே, இவன் பூலோகத்தில் தங்களைப்போல் வேஷம் தரித்து நடித்தவன். இவன் தன்னைவிட

இவ்வேஷத்தில் நிகரற்றவர் இல்லை என்றும், தாங்களும் தனக்கு ஒப்பாக மாட்டீர் என்றும் சொல்லித் திரிந்த சண்டாளன். மேலும், நாடகத்திற்கு வரும் கற்புடைய மங்கையரின் மீதெல்லாம் தன் பார்வையைச்செலுத்தி, நாடகத்திற்கே இழிவை யுண்டாக்கிய கொடும் பாவி!

ஏ—ஆஹாஹா! இக்கொடும்பாதகனைக் கொண்டுபோய், கூர்ங் கத்தியால் இருபதினாயிரம் வருடம் குத்துங்கள். கடைசியில் இவன் வண்ணான் வீட்டுப் பெட்டைக் கழுதையாய் உழலக் கடவன்.

சி—மாணிக்கமுதலி!

[மாணிக்கமுதலியைக் கொண்டு வருகிறார்கள்]

ஐயனே, இவன் வேலை வெட்டியில்லாமல் திண்ணைத் தூங்கியாய்த் திரிவதுடன், ஒருபாபமும் அறியாத நல்லோரை எல்லாம் வஞ்சித்து, அவர்கள் பொருளை அபகரிக்கவேண்டி, அவர்களை நாடகக் குத்தகை எடுக்கச்செய்து இடையே, அற்பத்தரகு பெற்று, அதனால் வயிறு வளர்த்தலையே பெரும் வேலையாகக் கொண்டவன்.

எ—அப்படிப்பட்ட இவனை ஆயிர வருடம் யானைக்காலில் மிதித்துத் துவைக்க வையுங்கள்.

சி—சாரளன்!

[சாரளனைக் கொண்டு வருகிறார்கள்.]

சார—அ, அ! ஏனையா! என்னையிங்கே கூப்டாதிங்கோ?— இவருயாரு, பார்த்தா ரொம்ப பெரியவரா இருக்குறாரே!

எ—அடே, வாயைமூடு. நீயார், சொல்.

சார—ஏ ஏ! நல்ல ஆளா இருக்கிறிங்களே, நீங்க? வாய மூடிக்குனு நானு எப்பிடி பதில் சொல்லுறது?

எ—பேசாமல் இருக்கமாட்டாய் நீ?—சித்திரகுப்தா, இவன் என்ன தீங்குகளைச் செய்துள்ளான்?

சார—அது எப்பிடி இவருக்கு தெரியும்; இவரே கேட்டா?

எ—பேசாமல் இரு—சித்திரகுப்தா, விரைவில் தெரிவி.

சி—ஐயனே, இவன் சிறுவயதி லிருந்து, முனிவர்களுக்குத் தொண்டு செய்து வந்தவன். அப்போது, அவர்கள் வைத்திருந்த பழமுதலானவற்றைத் திருடித் தின்றவன். அன்றியும், சத்தியவான் உபதேசித்த சிவநாமத்தை அசட்டை செய்து, திருடும் தொழிலை விடாமல் திரிந்தவன்.

சார—ஏ ஏ! நிறுத்தையா, தெரிஞ்சா சொல்லனும் இல்லாவிட்டா தெரியாதின்னு சொல்லவோனும். அந்தத் திருடுன பாவமெல்லாம், சத்தியவான் சொன்னதே சிவான்னு சொன்னேனே, அப்போதே போய்ச்சே. இப்ப இன்ன இருக்குது?

எ—அப்படியா! சித்திரகுப்தா, இவன் ஏதேனும் சிவ புண்ணியம் செய்துளானோ?

சி—ஓர்முறை மாத்திரம், சத்தியவான் உபதேசித்தபோது, சிவநாமத்தை உச்சரித்திருக்கிறான்.

எ—அப்படியா!—அப்பா, நீ இவ்விடத்தில் இருப்பதற்குரியவன் அல்ல. என்ன வரம்வேண்டும் கேள்; தருகிறேன்.

சார—எனக்கா?—இப்ப கொஞ்சம் பசிக்குது; கொஞ்சம் பழங்க கொடுங்க.

எ—உம்! நீ என்செய்வாய்!—அடே, இவனைக் கொண்டு போய் நற்கனிகள் நிறைந்த ஓர் பொழிலில் விடுங்கள். கடைசியில் நீ பிராமணனாகப் பிறப்பாயாக!

[சாரளனைக் கொண்டு போகிருர்கள்.]

முடிந்ததா ?

சி—எல்லாம் ஆயிற்று அரசே.

எ—ஆயின், இன்று எவருடைய உயிரைக் கொண்டுவர வேண்டும். பார்த்துச்சொல்.

சி—(கணக்கைத் திருப்பித் திருப்பிப் பார்த்து) ஐயனே, இன்று ஒருவனுடைய உயிரைத்தான் கொண்டு வர வேண்டும்.

எ—யார் அவன் ?

சி—சாலுவ தேசாதிபதியாய் இருந்த தியுமத்சேனரின் மகன் சத்தியவானின் ஆயுள் இன்ருேடு முடிவாகிறது.

எ—அப்படியா?—அடே தூதர்காள், நீங்கள் இப்போது, மத்ராபுரிக் கடுத்துள்ள கானகத்தே, தன் மனைவியுடன் இருக்கும் சத்திவா னுயிரைக் கொண்டு வாருங்கள் ; விரைவில் செல்லுங்கள், சீக்கிரம்.

[தூதர்கள் போகிருர்கள்.]

இனி, சபை கலையலாம்.

[சபை கலைகிறது.]

---

## மூன்ருமங்கம் — முதற்காட்சி.

களம்: காடு—காலம்: நண்பகல்.

சத்—கண்ணே, கண்டாயதோ முனிவர்களை ?

சா—பிராணநாதா, தங்கள் கடாக்ஷத்தால், அடியாள் அவர்களைத் தரிசித்துத் தன்னியை யானேன்.

சத்—அந்தோ! சாவித்திரி, பார்த்தனையா உன் முகத்தில் வெயர் வரும்புவதை! நான் அப்போதே சொல்லவில்லையா, உன்னால் இக்கானகத்தைக் கடக்க முடியாதென்று? கண்ணே, பாவி என்னால் நீ, என்ன என்ன கஷ்டங்களுக்கு உள்ளாகின்றாய்!

சா—பிராணநாதா, மீட்டும் அதைச் சொல்லாதீர். அங்ஙனம் தாம் சொல்வது, எனக்குக் கர்ண கடூரமாய் இருக்கிறது.

சத்—கண்ணே, உன் ஹடத்தை நான் என்னென்பேன். இவ்வளவு தூரம் நடந்து வந்ததாலாம் இளைப்பையும் காட்டிக் கொள்ளாமல், ஏதோ கஷ்டம் இன்றி வருபவள் போல அன்றோ நீ காட்டிக்கொள்கிறாய்!

சா—வன விநோதங்களைக் கண்டு மகிழும் எனக்கு, என்ன கஷ்டம் தோன்றப் போகிறது பிராணநாதா?

சத்—தெரியும் எனக்கு—சாவித்திரி, இதோபார் இச்சந்தனமரத்தை! எவ்வளவு உயரமாய் வளர்ந்துள்ளது, கண்டனையா?

சா—(தனக்குள்) என்ன பிரியம் வைத்துள்ளார் என்மேல். தெய்வமே! இவரை நான் எங்ஙனம் பிரிந்துய்வேன்!-இதுவா பிராணநாதா, சந்தனமரம் என்பது! மிகவும் அடர்ந்து செழிப்புடன் இருக்கிறதே.

சத்—ஆம். அதோ அம்மரத்தில் இருந்து குதூஹலத்துடன் கூடிக்குலாவும் குருவி இனங்களைப் பார், என்ன மகிழ்வாய் இருக்கின்றன.

சா—(தனக்குள்) இவற்றை எல்லாம்கண்டாவதென்ன!—பிராணநாதா, உற்றாரனைவரையும் ஒருங்கே சேர்த்து, உணவளித்து மகிழும் உறவோர் பலரும் ஒருங்கு சேர்ந்திருப்பது போலன்றோ, காணப்படுகின்றன அவைகள்!

சத்—கண்ணே, நீ அங்ஙனம் செய்யக்கண்டு, களிப்புறுதற்கில்லையே என்று கலக்கம் கொள்வாய் என்பது எனக்குத் தெரியும். ஆயினும்—

சா—மறுபடியும் பாரும்—அதைப்பற்றித் தாம் ஒன்றும் தெரிவிக்க வேண்டாம், பிராணநாதா. வாரும் போவோம்.

சத்—ஆஹா!—கண்ணே, என்னநமக்கு துர்ச்சகுணங்கள் தோற்றுகின்றன!—பார், அதோ நாகம் கட்டுவதை!

சா—பிராணநாதா, இச்சகுணங்கள் நம்மை என்ன செய்துவிடும். அன்று பிரமன் எழுதிவிட்ட எழுத்தினை மாற்ற வல்லனவோ இச்சகுணங்கள்? இதை ஓர்பொருளாக எண்ணி, ஏங்குகின்றீரே தாம்.

சத்—கண்ணே, ஓர் நாளும் இப்படி இருந்ததில்லையே எனக்கு! பார் மறுபடியும்! பூனை குறுக்காகப் போவதை—அந்தோ! என் அருமைத் தாய் தந்தையர்க்கு ஏதேனும் தீங்கு நேரிட்டதோ!

சா—அப்படியொன்றும் இராது பிராணநாதா. சகுனங்களை மெய்யென்று எண்ணி, எல்லாம் அறிந்ததாம், இவ்விதம் துயரப்படலாமா? இவை என்ன செய்யும்? இவற்றிற் கெல்லாம் நாம் அதைர்யப் படலாமா?

சத்—சாவித்திரி, ஏதோ எனக்கோர் பெரும்விபத்து ஏற்படும்போல் தெரிகிறது.

சா—அப்படி ஒன்றும் ஏற்படாது, பிராணநாதா. தம்முடைய மனத்தை இச்சிறு விஷயத்தில், கலங்க விடலாமோ தாம்?—பிராணநாதா, (23) அப்படி வருவது வந்தேதீரும். எதற்கும் நம்முடைய மனத்தைத் திடப்படுத்திக் கொள்வது, நமது கடமை யன்றோ?

சத்—கண்ணே, நீ என்ன சொல்லினும், என்மனம் ஒரு வழிப்படவில்லையே!

சா—ஆனல், வாரும், நாம ஆஸ்ரமத்தைச் சேர்வோம்.

சத்—இன்னும் நான் கனிவர்க்கங்களைப்பறிக்கவில்லையே. இரு, இம்மாத்தில் விறகுக்கேற்ற கிளைகள் உள்ளன; அவற்றை ஒடித்துக்கொண்டு வருகிறேன்.

சா—தாம் போக வேண்டாம் அதற்கு. நான் சென்று ஒடித்து வருகிறேன்.

சத்—உன்னல் மரத்தின்மீதேற முடியாது. நீ இங்குத் தானே இரு. (போய்மாத்தின் கிளையொன்றை ஒடிக்கும்போது) ஆ! ஆஹா! சாவித்திரி! சாவித்திரி!! என்னைச் சற்றுப் பிடித்துக்கொள்! பிடித்துக்கொள்!

சா—என்ன! என்ன! பிராணநாதா! (அவனைப் பிடித்துக் கொள்கிருள்.)

சத்—சாவித்திரி! எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே! ஆ! மயக்கமாயிருக்கின்றதே! அந்தோ! கைகால்களெல்லாம் நடுக்கங் கொள்கின்றன. கண்ணே! கண்மணி! ஆ! ஆ! சாவித்திரி! கண்கள் இருண்டுபோயிற்றே!

சா—பிராணநாதா! ஒன்றுமில்லை. பயப்படவேண்டாம்.

சத்—ஐயோ! ஐயோ! என் தலை வெடித்துப்போவதுபோல் இருக்கின்றதே! சாவித்திரி! என் தலையின்மீது யாரோ இருப்புலக்கையால் இடிக்கின்ருர்களே!

சா—பிராணநாதா—ஒருவரும் இங்கில்லையே!

சத்—சாவித்திரி! சாவித்திரி!! பயமாயிருக்கின்றதே! ஹா! காதடைக்குதே கண்மணீ! என்னசெய்வேன் நான்! ஈசா! என்னல் பொறுக்க முடியவில்லையே!

சாவித்திரி! கைகால்களெல்லாம் ஓய்ந்துபோயிற்றே! ஆ! ஹா! மார்படைத்து விட்டது! பெருமூச்சு வருகிறதே! சாவித்திரி! மூச்சுவிட முடியவில்லை! மூச்சுவிட முடியவில்லை! ஆ! என்னைச் சற்றுப் படுக்கவை.

சா—பிராணநாதா! அப்படியே செய்கிறேன் பயப்பட வேண்டாம் (தன் மடியின்மீது படுக்கவைத்துக்கொண்டு) ஹா! அம்பிகா! கௌரீ!

சத்—ஆஹா! யார் அது! யாரது!

சா—பிராணநாதா! ஒருவரும் இங்கில்லையே. தாம் ஏன் பயப்படுகின்றீர்?

சத்—அதோ பார்! அதோ பார்! (24) சாவித்திரி! பயங்கரமாயிருக்கிறதே அவர்களைப் பார்க்கும்பொழுது! போங்கள்; போய்விடுங்கள்.

சா—யாரிடத்தில் பேசுகிறீர் பிராணநாதா? இவ்விடத்தில் ஒருவரையும் காணேமே.

சத—நான் வரமாட்டேன். நான் வரமாட்டேன் போங்கள்—சாவித்திரி! அதோபார். யாரோ ஒருவன் கையில் கயிற்றை யெடுத்துக்கொண்டு வருகிறான்.

சா—ஐயோ! கயிறும் கையுமாய் வருவதாகச் சொல்கிறீரே—அம்மணீ! யான் என்ன செய்வேன்! எனக்கு ஒருவரும் துணையில்லையே இங்கு!

சத்—அதோ போகிறான்! அதோ போய்வருகிறான்.

சா—பிராணநாதா! ஒருவரும் இங்கில்லை. தாம்பேசாமல் இரும்.

எ—(உள்ளிருந்து) மடையர்களே, ஓர் மானுடன் உயிரைக் கைப்பற்ற வகையற்றீரா?

சத்—ஆ! ஹா!—சாவித்திரி! அதோபார்! அதோபார்! யாரோ பெரியவன்! கையிற்கயிறு!

சா—எனக்குப் புலப்படவில்லையே!—கௌரி நாராயணி!

சத்—ஆஹாஹா! கழுத்தைப்பிணிக்கிருன். ஆஹா! ஆ! ஆ! ஆ!

[எமன் பாசத்தால் சத்தியவான் உயிர்கொள்கிருன்]

சா—பிராணநாதா! பிராணநாதா! ஐயோ! பேசமாட்டேன் என்கிருரே! பிராணநாதா!—மூச்சடங்கிவிட்டதே! பிராணநாதா (25)—ஆ! பிராணநாதா! என்னை மோசம்செய்தா போனீர்! ஐயோ! நான் என்ன பாதகம் செய்தேன் என்று, என்னைப் பிரிந்துபோக மனம் துணிந்தீர்! நாதா, என்னைப் பிரியவும் உமக்கு மனம் வந்ததா! பாதகி, தனியானேனே! பிராண நாதா, கண் திறந்து பாரும்! மற்ெருரு துணையும் வேண்டாது, நாதா உம்மையே அன்ேறு நான் விரும்பி வந்தேன் என்னைத் தனியாய் இங்குத் தவிக்க விட்டுப் போவது, தமக்கு நல்லதாமா! என் இன்னுயிர்க் கிறைவராய் இன்ப மூர்த்தியாய் விளங்கிய தம்முடைய அழ கொழுகுந் திரு முகத்துப் பொலிவு காண்கிலனே! மின் செய்பூண் அணிகுலவும் புயங் காண்கிலனே! அந்தோ! அந்தோ! நாதா! என்செய்வேன் இனி! என்செய்வேன் இனி! பிராணநாதா! இன்னும் ஒருவருடம் சரியாகவும் முடிய வில்லையே! இதற்குள் தாம் என்னை விட்டுப் பிரிய எப்பாதகங்கள் செய்தேன். பிராணநாதா! ஏழையுடன் வார்த்தையாடலாகாதா! பேசாமல் இருக்கிறீரே! நான் இவ்வளவு வருந்தியும், தங்கள் மனம் கரையவில்லையா! அந்தோ! பிராணநாதா! கரையவில்லையா தம்மனம். எப்படிதான் தம்மைவிட்டு, இவ்வுலகில் உயிருடன்

வாழ்ந்திருக்கப் போகிறேன்! ஐயோ! என்னைப் போன்ற பெண்கள் எல்லாம், என்னை ஆளனிழந்த பாதகி என்றன்றோ ஏசுவார்! பிராணநாதா! தம்மையே கதிஎன வந்தடைந்த இப்பாவியைக் கயிறிழந்த கழுத்துடன் கலங்கவிடுவது நியாயமா! ஐயோ! ஐயோ! நான் என்னபாவம் செய்தேன்; இந்தக்கதிக் காளாக! அந்த நாரத முனிவர் கூறிய வார்த்தை உண்மையாயிற்றே! அவர் எனக்கு ஆசிகூறிய மொழி பொய்த்துப் போயிற்றே! பிராணநாதா, மஞ்சள் குங்கும மிழந்த மாபாவியாய், மாநிலத்தில் எப்படி உயிர் தரித்திருப்பேன்! ஐயோ! என்னால் அல்லவா, தாம் இந்தவயதில் உயிர் இழக்கலானீர்! அந்தோ! வேறெவளையேனும் மணந்திருந்தால், தமக்கு இவ்வழி வந்திராதே! பாவி என்தீவினை என் பிராணநாதரைச் சூழவேண்டுமோ! ஆ! பிராணநாதா! தாம் போய் உள்ளஇடத்தையாவது சொலலலாகாதா, அடியாளுக்கு-பாவிநான் தம்முடன் அங்குவரப்படாதா! பிராணநாதா! பிராணநாதா!—கௌரி உனக்கும் கண்ணில்லாமல் போயிற்று? நான் உனக்குச் செய்த பூசைகள் எல்லாம், இக்கதிக்குவரவோ! ஆ! தெய்வமே! நான் தன்னந் தனியாய் இக்கானகத்தே கணவனை இழந்து கதறப்பார்க்க வேண்டு மென்று எத்தனைநாள் நீ எண்ணம் கொண்டனை! ஐயோ! எனக்கொருவரும் திக் கில்லையா? தெய்வமே! நான் உனக்கு என்ன அபராதம் செய்தேன்!—மரங்களே, நீங்களாவது என்பிராணநாதர் போனஇடத்தைச் சொல்லுங்கள்! ஐயோ! ஏன் பேசாமல் இருக்கிறீர். உங்களுக்கும் என்மேல் இரக்கம் இல்லையா!—கிளிகளே, நீங்களாவது சொல்லலாகாதா! என் நாதர் எங்குச் சென்றுள்ளார்! சொல்லுங்கள்; பாவிஎன்மேல் கிருபைவைத்து. ஐயோ!

ஆளனை இழந்த பாவியெதிர் நிற்பதும் பாவம் என்று ஓடிப் போகின்றனவே!—பிராணநாதா! நான் தான் பாவியானாலும் தாம் தம்முடைய பெற்றோருக்கும் ஒருவார்த்தையாவது சொல்லாமற் போய்விட்டீரே! அந்தப் பாழும் பிரமனுக்கும் இரக்கம் இல்லாமற் போயிற்றா? நாதா, தம்முடைய உயிரைக் கொண்டு போன எமனைத்தருமன் என்று கூறுகிறார்களே!—ஆ! தருமராஜரே! உமக்கும் அடியாள் மீது இரக்கம் இல்லையா!

எ—(எதிர்வந்து) அம்மா சாவித்திரி, நீ வருந்தி என்ன பலன்? உன்நாதன் ஆயுள் இன்றுடன் முடிவு பெற்றதால், நான் அதைக்கொண்டு ஏகுகின்றேன். உன்னைக் கற்புடைய உத்தமி என அறிந்ததால், உனக்குக் காட்சி தந்தேன். இனி நீ வருந்தாது, உன்நாதனுக்குச் செய்யவேண்டிய கடன்களைச்செய்து, காலத்தைக்கழிப்பாய். (செல்கிறான்.)

சா—தருமராஜரே!— (26)

[எமனைப் பின்பற்றிச் செல்கிறாள்.]

---

## மூன்றுமங்கம் – இரண்டாங்காட்சி.

களம்: காட்டுவெளி—காலம்: பிற்பகல்

சா—தருமராஜரே! தருமராஜரே! அடியாள் தமது இணையடி போற்றினேன். மஹானுபாவா, ஏழைக்கு இவ்வுலகில் உம்மையன்றி வேறுகதி இல்லை! ஐயனே! தருமநெறி தவறாமெய்யனே! தென்றிசையாளும் துய்யனே! ஏழையைக் கண்பார்த்தருளும்! கண்பார்த்தருளும்!

எ—அம்மா சாவித்திரி, நீயேன் இவ்வளவு தூரம் வீணுக்கடந்து வந்தனை? நான் செய்யப்போவது ஒன்றும் இல்லை. நீ பேசாமல் திரும்பிச்சென்று, உன் நாதனுக்குச் செய்யவேண்டிய ஈமக்கிரியைகளை ஏமமாய்ச்செய்து முடிப்பாய். என் பின் வராதே.

சா—வைவஸ்வதரே,(27) அப்படிதாம் சொல்லினால், ஏழை என்ன செய்வேன்! எங்ஙனம் உய்வேன்! தருமப் பிரபு, நாதனை இழந்த பாவிநான் எங்ஙனம் நாட்டில் உயிர்தரித் திருப்பேன்!

எ—அம்மா, அன்று உன் நாதனுக்குப் பிரமன் இட்ட ஆயுள் இவ்வளவேயானால், அதைத்தடுப்பவர்யார்? யான் எனக்குரிய வேலையைச்செய்தேன். அங்ஙனம் செய்யாமற் போவேனாயின், என்னை எப்படியும் தண்டிப்பன், எல்லாம் வல்ல இறைவன். சாவித்திரி, வருந்தியாவதென்ன?

சா—ஐயனே, எவ்வளவு எளிதாகச் சொல்லிவிடுகிறீர்! எம தருமரே, தம்மைத் தரிசித்தும், பாவிநான் இத் தரணியில், நலனிழந்தவளாய்த் திரியலாமோ? அறக் கடவுளே! அறக்கடவுளே! அடியாள் குறையை அகற்றலாகாதா!

எ—அம்மா, என்னசெய்வது! வருந்தாதே! எவ்வெக் காலங்களில், எவ்வெவர், எவ்வெத்துயர்களை அநுபவிக்க வேண்டும் என்று இருக்கிறதோ, அவ்வக்காலங்களில், அவ்வவர், அவ்வத்துயர்களை அநுபவித்துத்தான் தீர வேண்டும். ஆகவே, நீ என்னை வேண்டிக்கொள்வதால் ஒரு பயனும் இல்லை. நான் வருகிறேன்.

சா—தருமராஜரே! தருமராஜரே! இப்படிச் சொல்லிச் செல்வது நல்லதாமா! சாதாரண தேவர்களைக் கண்டாலும், துயர்போம் என்பார்களே! ஐயனே, காணு

தற்கு அரிதாம் தங்களேயே கண்ட இப்பாவியின் துயர் போகாதிருக்க, நான் என்ன பாவம் செய்தேன்! வைவஸ்வதரே! ஏழைமீது இரக்கம் கொண்டு என் பிராண நாதருடைய உயிரைப் பிக்ஷையாகத் தாரும்.

எ—ஆஹா ஹா! சாவித்திரி! என்ன கேட்டாய்? (28) நான் உன் பிராணநாதனுயிரைக் கொடுப்பதா? நானே வந்துஒரு கால் கொண்ட உன் நாதனுயிரையா மீட்டும் கேட்கின்றனை?

சா—எமதருமரே, தம்முடைய கோபத்திற்கு இலக்காகும் தகுதி யுடையவளோ ஏழை! ஐயா! தாம் என்னை என்ன செய்தபோதிலும், செய்யுங்கள். தம்முடைய பாதங்களைப் பற்றெனப்பற்றிய பாவி நான், என்ன செய்யவல்லேன்! சண்டரே, தம்மையொத்த பெரியோரிடம் கேட்கத் தகுந்த பிக்ஷையைப்பேதையான் விரும்பிக்கேட்டேன். அதுபற்றித் தாம் கோபம் கொள்கிறீர்!—ஆ! பிராணநாதா!

எ—(தனக்குள்) என்ன வினயம்! என்ன தாழ்மை! என்ன பணிவு!—அம்மா, உன்மீது கோபம்கொள்ளவில்லை நான். என் வேலையின் உயர்வைக் கெடுக்குமோர் வார்த்தை புகன்றதால், சிறிதுமனச்சலனம் அடைந்தேன்—நீ அறியாத தொன்றில்லை; ஆயினும், நான் சொல்வதைக்கேள். சம்ஹரிக்கும் தொழிலைத்தான் எனக்கு சர்வேஸ்வரன் கொடுத்துள்ளார். அத் தொழிலை நான் சரிவரச் செய்யவேண்டும் அன்றோ? சாவித்திரி, நான் உயிரை எடுத்துச் செல்லக் கடமைப பட்டவனே யல்லாது கொடுத்துச்செல்லக் கடமைப் பட்டவன் அல்லன.

சா—தருமராஜரே, அப்படியானல் அடியாள் உயிரையும் உடன் கொண்டு செல்லுங்கள்—இவ்வளவாவது செய்

தலாகாதா! என் பிராணநாதருடன் நானும் செல்வேனுயின், எப்படியும் புனிதையாவேன். வைவஸ்வதரே, இதையாவது அனுக்ரஹியுமே!

எ—சாவித்திரி! இது என்ன வார்த்தை! என்னால் ஆகக்கூடிய வேலையன்றே இது! எவரெவர்க்குப் பிரமன் இட்டஆயுள் முடிவு பெறுகிறதோ, அவரவரைத் தான் கொண்டு போக வேண்டும் நான்; உன்னுடைய ஆயுள் என்று முடிவுபெறு கிறதோ, அன்றுனைக் கொண்டு செல்வேன்!

சா—வைவஸ்வதரே, கோரியவரங்களைக்குறைவறக்கொடுத்து, அடியார்களைரக்ஷிக்கும் தயாளுவாகிய தம்மால் எந்தக் காரியம் சாத்தியமாகாமற்போம்? (29) ஐயா! நினைத்தவற்றை நினைத்த அந்த க்ஷணத்திலேயே செய்ய வல்ல தாம், இப்படியும் சொல்லலாமா! ஐயனே! தன்னந் தனியளானேனே! தருமராஜரே! இந்த ஓராண்டளவும் என் நாதரும் நானும் உடலுயிர் போல் உலகில் வாழ்ந்தோமே! ஐயா! அங்ஙனமாக, தாம் என்னைத்தனியாகப்பிரித்து அவரை மாத்திரம் அழைத்துக்கொண்டுபோவது நல்லதா! ஐயா, என்னைத்திக்கற்றவளாய்ச் செய்தீரே! இதுதானு, அடியாள் தம்மைத்தரிசித்ததாற் கண்டபலன்!

எ—அம்மா சாவித்திரி, வருந்தாதே. நீ என்னைப்பழித்து என்னபிரயோஜனம்! எனக்கு எவ்வளவு சக்தியுண்டோ, அதுவரை உபயோகிக்கலாம். என்னுலாகக் கூடாத காரியங்களைச் செய்என்றுசொன்னுல், என்னுல் எங்ஙனம் செய்யஇயலும். நலலது, உனக்கோ மோரமாயது. நானும் போகவேண்டும். என்னைக் கண்டும் ஓர்பலனையும் நீ அடையவில்லை எனக் கூறுவ

தால், உன்நாயக னுயிரையன்றி வேறெவற்றையே னும், கேள்தருகிறேன்.

சா—வைவஸ்வதரே, என் நாதரைவிட இவ்வுலகிற் சிறந்த பொருள் எனக்கு என்னஉண்டு! ஐயா! தாம் அறியா தொன்றுண்டோ இவ்வுலகில்! மெய்யனே, கெஞ்சிக் கேட்கும் வஞ்சியின்பால் இரங்கி, நெஞ்சகத்தருள் கூர்துய்யா! தாம் கேள்என்று கட்டளை இடுவதால், கேட்கிறேன். தருமரே, என் மாமி மாமன்மாருக்கு முன்போல் கண் தெரியும்படி அனுக்ரஹியும்.

எ—அப்படியே ஆகுக! இனி எனை விட்டுச்செல்வாய். (போகிறான்.)

சா—அந்தோ! போய்விடுகிறாரே!— எமதருமரே!

(பின் தொடருகிறாள்)

[அக்கினி ஆற்றுவழி.]

எ—இனித்தொடராள் சாவித்திரி. தந்த ஓர் வரத்துடன் தன்னகர்க் கேகுவாள்.

சா—வைவஸ்வதரே! அடியாள் எங்ஙனம் என் ஆவி நாதரை விட்டுப் பிரிவேன்!

எ—(தனக்குள்) ஆஹா! என்ன ஆச்சர்யம்!—அம்மா சாவித்திரி, நான் முன்னரே சொல்லவில்லையா, உன் நாதனுயிரை உனக்குத் தரமுடியாதென்று? நீயேன் என்னைத் தொடர்ந்து வந்தாய், மேலும்?

சா—ஐயா! நான் என் பிராணநாதரைத் தம்மிடம் தனி யாக விட்டு, எங்ஙனம் தனித்திருப்பேன்! ஐயோ! அவர் ஒருபோதும் எனைவிட்டுப் பிரியாதவர் ஆயிற்றே! (30)

எ—சாவித்திரி, நீ வருந்தியாவ தொன்றுமில்லை. என் வீண் கஷ்டங்களுக் குள்ளாகி, கல்லும் முள்ளும்

நிறைந்த இந்தக் கடுங்கானகத்தே என்னைத் தொடர்ந்து வருகிறாய்! நீ எவ்வளவு தூரம் என்னைப் பின்பற்றி வந்த போதிலும், உன் கோரிக்கை நிறைவேறாது. ஜீவர்கள் உலகில் ஜனிக்கும்போதே, அவரவர்களுக்கு ஆயுள் இவ்வளவென்று அயன் எழுதி விட்டுள்ளான். அந்த அயன் எழுதிய எழுத்தை அழிக்க, அந்த விண்ணவராலும் முடியாது. அங்ஙனமாக உன்னால் என்ன முடியும்! நீ பதிவிரதா ரத்தனமாக விளங்குவதால், எவர் கண்ணிற்கும் புலப்படாத நான் உன் கண்ணிற்குப் புலப்பட்டேன். உன்குணத்திற்கு மகிழ்ந்து, உன்னுடன் வார்த்தை யாடலானேன். நீ கேட்ட வரத்தையும் தந்தேன். இனி நீ என்னுடன் வருவது நல்லதல்ல. ஆகவே, நீ உன் ஆஸ்ரமம் போய்ச்சேர்.

சா—தருமராஜரே! உயிரற்ற பிணமான நான், எங்ஙனம் ஆஸ்ரமத்தைச் சேர்வேன். ஐயா, என் உயிரைத் தாம் கொண்டு செல்லும்போது, உடல் எங்ஙனம் இயங்கும்! ஐயனே, உயிரோடு உடலும் வருகிறது. தயைசெய்து அழைத்தேகும் அதனையும்.

எ—அது என்னால் முடியாத காரியம் என்று அப்போதே சொல்லிவிட்டேன்.

சா—தருமராஜரே! சற்றும் இரக்கம் இன்றி இங்ஙனம் சொல்கிறீரே! புருடனை இழந்தபாவி என்று என்னை எவரும் ஏசுவரே! அந்தோ! ஆளனை அடவியிற் கொண்டு சென்று, அவ்விடத்தில் கொன்றுதீர்த்த பேய் என்று எவரும் என்னைப் பழிப்பார்களே! கருணாநிதி! நாயகனில்லா வாழ்வுடன் நாட்டிலிருந்து என்ன பயனை யான் அடையப்போகிறேன்! தருமரே! என்னையொத்த பெண்கள் எல்லாம் தத்தம் கணவரு

டன் களித்துவாழ, சண்டாளி நான் ஒருத்தியோ தனித்து வாழவேண்டும்! ஆதலால், ஐபனே! என்னையும் என் நாயகருடன் அழைத்தேகும்! ஐயா அழைத்தேகும்!

எ—(தனக்குள்) என்ன ஆச்சர்யம்! என்றும் இல்லா வேறுபாடு, இன்று என்னிடம் காணப்படுகிறது! முதலில், இவ்வம்மையின் கண்ணிற்குப் புலப்பட எண்ணினேன். பிறகு உடன் வார்த்தையாடவும் எண்ணினேன். வரந் தரவும் துணிந்தேன். இப்போது, இவ்வம்மையின் இனிய மொழிகளைக் கேட்கக் கேட்க எனக்கு இயற்கையாய் உள்ள கடினசிந்தையும் கட்டற்றொழிகிறதே—அமமா, நான் சொல்வதைக்கேள். நான் உன்னை உன் புருஷனுடன் அழைத்துச்செல்ல, இது காலம் அல்ல. இன்னும் நீ இவ்வுலகில், வினைப் போகங்களைத் துய்க்க வேண்டியுள்ளாய். அவை முடிந்ததும், உன் நாதனை அழைத்துக் கொண்டு போவது போலவே, உன்னையும்கூட்டிச் செல்வேன். இப்போது நீ இவ்வளவு வருந்திக் கேட்பதால், இன்னும் உன் நாதன் உயிரன்றி, வேறெதையேனும் தரச் சித்தமாய் இருக்கிறேன். கேள் வேண்டிய தொன்றை.

சா—ஐயா, என் பிராணநாதருயிரையன்றித் தாம் வேறு எதைத் தரினும், எனக்கு என்னும் அது! ஆயினும், என் மாமி மாமன்மாருக்கு முன்போல் அவர்கள் ராஜ்ஜியாதி சகல போகங்களும் உண்டாக அனுக்ரஹியும்!

எ—அப்படியே தந்தேன். இனி என்னைத் தொடர்ந்து வரவேண்டாம். இந்த அக்னியாற்றைக் கடக்க உன்னால் இயலாது. ஆகவே, உன் ஆஸ்ரமத்தை அணுகுவாய். (ஆற்றைத் தாண்டிச் செல்கிறான்.)

சா—ஆ! பிராணநாதா! இனி என் செய்வேன்! ஐயோ இந்த நெருப்பாற்றை எங்ஙனம் நீந்துவேன்! வைவஸ்வதர் பயங்காட்டிச் சென்றாரே!—சீ! என்ன எண்ணம் கொள்கிறேன்! என் பிராணநாதரைவிட என் உயிர் அவ்வளவு பெரியதா! தீயிலிறங்கிச் சாம்பலாகிறேன். (நெருப்பாற்றைக் கடந்து செல்கிறாள்.)

[காட்டுவழி.]

எ—நெருப்பாற்றைக் கடந்துவர நேரிழையால் ஆகாது—

சா—இதோ தமது கிருபையால், கடந்து வந்தேன் அதையும். தருமராஜரே!—

எ—என்ன! என்ன!— சாவித்திரி, நெருப்பாற்றை எங்ஙனம் நீ நீந்திவந்தனை!

சா—ஐயனே, தமது கிருபையைப் பூரணமாய் அடையப் பெற்ற ஏழைக்கு, இந் நெருப்பாறு ஓர் தடையாகுமோ?

எ—சாவித்திரி, நான் உனக்கு எவ்வளவோ நியாயங்களை எடுத்துரைத்தும், நீ அவற்றைக் கேளாது ஒரே ஹடத்துடன் என்னைப் பின் தொடர்ந்து வருகிறாய். என்னாலாகக் கூடாத காரியத்தை நான் எப்படி செய்வேன்? நீ வருந்துவதைக் காண என் மனம் சகிக்கவில்லை. உத்தமியாம் உன் மனதை நோகச் செய்ய வேண்டும் என்ற கருத்தில்லை எனக்கு. அம்மா, உன் புருடனுயிரை மீட்டுந் தருதல், அசாத்தியமான காரியம் ஆகும். என்ன செய்வது! தாம் தாமுன் செய்தவினை தாமே அனுபவிப்பர். பூர்வத்தில் நீ செய்த வினைக்கீடாகவே இவ்வுலகில் போகத்தை அனுபவிக்க வேண்டும். பிராரத்வத்தை யொழிக்க அப்பிரமனாலும் முடியாது. ஆதலால் நீ வருந்தி ஒரு

பயனும் இல்லை உன் மனதை நீயே திடப்படுத்திக் கொள்.

சா—ஐயனே, தி மென்னனம் உண்டாகும்; என் பிராண நாதருயிரைத் தாம் கொண்டு செல்லும்போது! ஐய னே, பாவி நான் பாரினில் என் பர்த்தாவுடன் சுக முற வாழப் பார்த்தருளும்! ஐயனே! பார்த்தரு ளும்!

எ—சாவித்திரி, நீ மறுபடியும் மறுபடியும், அதையே கேட்பதால், என்ன பிரயோஜனம்? உன் நாதன் உயிர் இனி வராது.

சா—ஐயனே, அப்படி சொல்லி விடாதீர்! ஏழை கதியற் றவளாய் ஏங்கி வாடுவதைத் தாம் அறியீரா! வைவஸ் வதரே, கருணா மூர்த்தியாகிய தமக்கு அடியாள் சொல்வதென்ன உண்டு! மண்ணுலகில் மணாளருடன் மகிழ்வாய் இருக்கக் கண்பாரும்.

எ—அது முடியாதகாரியம்—பிறகு?

சா—ஐயனே! ஐயனே! அவர் ஒரு நாளும் என்னைவிட்டுப் பிரிந்தவர் அன்றே. தாம் அவரைத் தனியாக அழைத் துக்கொண்டேகுகிறீரே!

எ—அம்மா, என்னை இது விஷயமாய் வற்புறுத்தாதே— வேண்டுமானால், இன்னும் தேவையான வரமொன் றைக்கேள். வீணாக வருந்தி என்ன பயன்?

சா—ஐயனே, என் நாதனை இனி காணும் பாக்கியம் அற் றேனே! பாவி ஆனேனே!—தருமரே, என் பெற் றோர்களுக்குப் புத்திரப்பேறு உண்டாகும்வண்ணம், அருள்புரியும்.

எ—சந்தோஷம்! அப்படியே அளித்தேன். இனி உன் னிடம் செல்வாய். (போகிறான்)

சா—என் இடம் என்பது வேறு உண்டோ, ஐயனே!

(பின்தொடர்ந்து போகிறாள்)

[மலைவழி.]

எ—அப்பா! அதுவரையிலும் தப்பிவந்தேன்.

சா—தருமபிரபு!

எ—ஆ! ஹா!—சாவித்திரி, போகவில்லையா இன்னும்?

சா—ஐயனே, அடியாளைத் தனியே போஎன்று சொல்கிறீரே!

எ—மற்று என்ன செய்யவேண்டும் என்கிறாய்? உன் நாதன் உடல் காட்டில் ஒரு துணையும் இன்றி வீழ்ந்து கிடக்கிறதே. சீக்கிரம் அங்குச்சென்று, அதற்குச் செய்யவேண்டிய வேலைகளைப் பார்.

சா—ஆ! வைவஸ்வதரே! அவருடலை மறுபடியும் காணப் படிமனம் துணிவேன் நான்! ஐயனே! அதை எண்ணும்போது என் நெஞ்சம் பகீரென்குதே!

எ—சாவித்திரி, இனி உன்னுடன் வார்த்தை யாடுவதால் ஒரு பிரயோஜனமும் இல்லை. நான் என் நகர்க்கேக வேண்டும்; நாழிகை யாயிற்று.

சா—ஐயா, தாம் சொல்லும் இடத்திற்கு யானும் வருகிறேன். நான் தனியாய் ஆஸ்ரமத்தைச் சேர்வதை விடத் தம்முடைய நகர்க்கு வருவதே மேலாகும்.

எ—அது முடியாத காரியம் என்று, நான் பலமுறை சொல்லியதை நீ கவனிக்க வில்லை. நான் உன்னை அங்கு அழைத்துச் செல்லவொண்ணாது.

சா—தருமரே, அங்ஙனம் சொல்லிவிடாதீர். தாம் தான் ஏழை மீது இரக்கம் பாராட்டா விட்டாலும், என்

தாய் சாமளாதேவியிடமாவது, நான் என்குறை இரந்து வேண்டிக்கொள்கிறேன்—

எ—அம்மா சாவித்திரி, நீ என்ன ஓரேபிடிவாதம் செய்கிருய்? அவள் என்ன செய்யவல்லாள் இது விஷயத்தில்?

சா—ஐயனே! அவ்வம்மை எப்படியும் இரக்கம் பாராட்டுவார்கள், தம்மகள் என்னும் வாஞ்சையால். தயைசெய்து அழைத்துச் செல்லும்.

எ—சாவித்திரி, நீ கொண்டுள்ள துயர் மிகுதியால், இங்ஙனமெல்லாம் உரையாடுகிருய். நான் சொல்வதைக் கேள். தேவையான மற்ருேர் வரம் பெற்றுச்செல்.

சா—ஆஹா!—அங்ஙனமானுல்—ஐயனே, அடியாளுக்குப் புத்திர பாக்கிய முண்டாக அனுக்ரஹியும்!

எ—அப்படியே தந்தேன்; இனி என்னைத் தொடர்ந்து வாராதே. மேலும் என்னைத் தொடர்ந்து வரும் பக்ஷத்தில், எனக்குக் கோபம் உண்டாகும். தந்த இவ்வரத்துடன் சார்வாய் உன் இடம் (செல்கிருன்)

சா—என்ன இது! வரத்தைக் கொடுத்துப் பேசாமல் செல்கிருரே! (பின்போகிருள்.)

[காட்டுவழி.]

எ—தப்பி வந்தோம், சாவித்திரியிடம்—

சா—ஐயனே!—

எ—யார்!—ஆஹா! சாவித்திரி! நீ என்ன வேலைசெய்தாய்? நான் அவ்வளவு சொல்லியும் கேளாமல், என் பின் ஏன் வந்தனை நீ? கண்டவர் நடுங்கும் சண்டன் நான்

என்பதை நீ அறியாயா? உன் உயர் குணத்திற்கு மெச்சி, நீ கேட்ட வரங்களை எல்லாம் நான் கொடுத்திருக்க, அவற்றோடு திருப்தி கொள்ளாமல், என் வார்த்தையை மீறிவந்தாயா? இனி காட்டேன் உன்மீது இரக்கம்! இது என்ன அநியாயம்! சற்றும் அச்சம் என்பதின்றி, சாற்றிய உரையினை மறுத்து, கொண்ட எண்ணத்தை முற்றுவிக்கக் கோரிவந்த உன் தைர்யம் தான் என்ன? என்னை யார் என்று எண்ணிவிட்டாய்? ஆஹா! நான் உனக்குக் காட்சி கொடுத்ததே தவறு. அதனிலும், உனக்கு வரங்கள் கொடுத்தது பெருந் தவறாகும்.

சா—ஐயனே, தமக்கு இத்தகைய கோபம் உண்டாகப் போகிறதா என்று காத்திருந்தேன். என் நல்ல காலத்திற்கடையாளமாகத் தங்களுக்கு நான் நினைத்த வண்ணமே கோபம் மூண்டு கொண்டது. இனி அடியாள் தன்னியை ஆனேன். வைவஸ்வதரே, அக்கோபத்தாலாவது, அடியாளுயிரைக் கைக்கொள்ளும். என் நாதரைக்காணும் பாக்கியத்தைப் பெறுவேன்!

எ—அப்படியா!—என் கோபமும் உனக்குக் குணமாயிற்றா? (தனக்குள்) ஆஹா! தன் நாதனை உயர்வென்றெண்ணித் தன்னுயிரைத் திரணம் எனமதித்த காரி இவளைப்போல் நான் இதுவரை எவரையும் கண்டேன் இல்லை— அம்மா, நான் சொல்வதைக்கவனி. இனி என்னால் ஒன்றும் செய்ய முடியாது. நான் அப்போதே சொல்லவில்லையா, இதுதான் கடைசிவரம் என்று?

சா—ஆம் அந்தவரத்தைப் பூர்த்தி செய்யாமல் வந்தால்!

எ—என்ன பூர்த்தி செய்வதின்னும்? உன் இஷ்டத்தின் படியே, உனக்குப் புத்திரபாக்கியம் உண்டாகுமாறு வரம் தந்தேனே!

சா—ஐயனே! தாம் அடியாளை மனம் சோதிக்கிறீரா? எனது நாதனுயிரைத்தான் தமது வசமாக்கிக் கொண்டீரே!— அங்ஙனமாக, யான் எங்ஙனம் அந்தப் பாக்கியத்திற்குரியவளாவேன்!

எ—என்ன! என்ன!— ஆஹா—! என்னமோசம் போனேன்! சாவித்திரி, இத்தகைய வரத்தையும் நீ கேட்கலாகுமோ! இது என்ன இது! இதுஎன்னாலாகும் காரியம் அல்லவே?—இப்படியோ இறைவன் ஆஞ்ஞை! அம்மா, சாவித்திரி! நீயே பதிவிரதை! நீயே உத்தமி! அம்மா, உன் கற்பென்னும் வாளால், காலனும் என்னை வெற்றிகொண்டாய். ஈசன் திருவுள்ளம் இங்ஙனமாக உள்ளது என்பதை, முன்னரே யோசிக்காமற் போனேன். அம்மா, உன் இஷ்டத்தின்படியே, உன் நாதனுயிரைத் தந்தேன். நீ அங்குச் சென்றவுடன், உன் நாதன் தூங்கி விழித்து எழுந்தவன் போல் எழுவான். போய்ச் சுகமாய் அவனுடன் வாழ்வாயாக!

சா—(பணிகிருள்)

எ—சுமங்கலீபவ! எழுந்திருப்பாய், சாவித்திரி.

சா—(எழுந்து) ஐயனே, விடைபெற்றுக் கொள்கிறேன்.

எ—அப்படியே செய். இவ்வழியே சிறிதுதூரம் சென்ருல், சமீபத்திலேயே காண்பாய் உன்நாதன் இருக்குமிடத்தை. செல்வாய்.

[சாவித்திரி வணங்கிச்செல்கிருள். எமன் அந்தரமார்க்கமாய்ச் செல்கிருன்.]

# மூன்றாமங்கம்—மூன்றாங்காட்சி.

[களம்: காடு—காலம்: மாலை.]

[சாவித்திரி வருகிறாள். சத்தியவான் விழித்தெழுகிறான்.]

சத்—சாவித்திரி!

சா—பிராணநாதா, இதோ இருக்கிறேன்.

சத்—சீ!—என்ன கனவுகண்டேன்!

சா—என்ன! கனவா கண்டீர்?

சத்—ஆம், ஆம்—அதிசயமாக அன்றோ இருக்கிறது!

சா—என்ன பிராணநாதா, என்ன கனவுகண்டீர் சொல்லும்?

சத்—இவ்விடத்தில் ஒருவரும் வரவில்லையா?

சா—யார் வந்ததாகச் சொல்கிறீர்?

சத்—சாவித்திரி, இன்று யான்கண்ட கனவைப்போல், என்றும் கண்டேன் இல்லை—அந்தோ! இது என்ன விபரீதத்தைக் காட்டும் குறியோ அறியேன்!

சா—அந்தக்கனவை இன்னதென்று சொல்லும் பிராணநாதா. நான் பிறகு சொல்கிறேன்.

சத்—கண்ணே, நான் மயக்கமுற்று உன் மடியின்மீதுபடுத்துக்கொண்டேன் அன்றோ?

சா—ஆம்.

சத்—பிறகு, என்னைக் கரிய ஓர் மனிதன் கையிற் கயிற்றுடன் வந்து, என் உயிரைக்கொண்டு சென்றனன். கண்ணே, அவனையே உலகர் எமன் என்று சொல்கிறார்கள் போலும்.

சா—பிறகு, பிராணநாதா!

OFFICE 21 JUN 1918 MADRAS.

சத்—பின்னர், அவன் என்னுயிர் கவர்ந்து சென்றதை அறிந்த நீ, அவனைப் பின்தொடர்ந்து சென்றதாகவும், அவனுன் வேண்டுகோளுக்கு இசைந்து என்னுயிரை, அவன் மீட்டுந் தந்ததாகவும் கண்டேன்.

சா—பிராணநாதா, தாம்கூறிய யாவும் கனவன்று.

சத்—கனவன்ரு? மற்றென்ன!

சா—இவையனைத்தும் உண்மையாகவே நடந்தன. தமதுயிரைக்கொண்டு போனவர், வைவஸ்தரேயாகும்.

சத்—என்ன! என்ன! உண்மையாக என்னுயிரை எமதருமர் கொண்டு சென்ருரா?

சா—ஆம், பிராணநாதா. அவர் தமதுயிரைக் கொண்டபின் நான் தம்மை எண்ணிப் பரிதபித்துக் கொண்டிருந்தேன். அவர் அதைச் சகிக்கோணுதவராய், எதிர்வந்து எனக்குத் தேறுதல் கூறினர்.

சத்—பிறகு! பிறகு!

சா—அடியாள் தமதுயிரைத்தருமாறு வேண்டினேன். அவர், அது தம்மால் முடியாதகாரியம், வேறு எதேனும் வரம்கேள் தருகிறேன் என்றனர். அடியாள், மாமிமாமன்மாருக்குக் கண்வருமாறு அனுக்ரஹிக்க வேண்டும் என்றேன். அவர் அப்படியே தந்து சென்றனர்.

சத்—அப்படியானுல், உன் மாமி மாமன்மாருக்கு, கண் நன்ருய்தெரியுமே இப்போது?

சா—அவர் அங்ஙனம் தான் வரம்தந்து சென்ருர்.

சத்—உம்! பிறகு!

சா—நான் மீட்டும் வைவஸ்வதரைத் தொடர்ந்து சென்றேன். அவர் உமதுயிரைத் தவிர வேறெதைக் கேட்

கினும் தருவதாய் உரைத்தார். அடியாள் முன்போல் எங்களுக்கு ராஜ்ஜிய உரிமை உண்டாக வேண்டும் என்று கேட்டேன். அதையும் தந்தார். பின்னும் விடாமல் அக்னியாற்றையும் பெருமலையையும் கடந்து சென்றேன்.

சத்—அப்படியா! உம்?

சா—அவ்விடத்தேயும், தமதுயிரைத்தவிர ஏதாவது வரம் கேளென்றனர். அடியாள், என் பெற்றோர்களுக்கும் எனக்கும் புத்திரபாக்கியம் உண்டாகுமாறு அனுக்ரஹிக்க வேண்டுமென்றேன். அவர் அங்ஙனமே யாகுக என்று கூறினர்.

சத்—கண்ணே, கண்ணே, உன்புத்தியை நான் என் என்பேன்! என்னுயிரைத் தவிர வேறெதையேனும் கேள் என்றால், இவ்விதம் கேட்டு, எமனையே ஏமாற்றிவிட்டனையே!

சா—முதலில் அவர் யோசிக்காமலே வரமளித்து விட்டார், பிராணநாதா. பிறகு, அவரை விடாமல் நான் தொடர்ந்து செல்லவே, ஏன் மேலும் வந்தாய் என்று கேட்டார். அடியாள், தாம் தந்த வரத்தைப் பூர்த்தி செய்யவில்லையே என்றேன். அப்பொழுதுதான் அவர் அறிந்தார்.

[உள்ளிருந்து சத்தியவந்தா' என்று கூய்ச்சல் உண்டாகிறது.]

சத்—ஆ!—யார் என்னை அழைப்பது!

சா—பிராணநாதா, மாமியின் குரலொலி கேட்கிறது.

[நாரதர், அஸ்வபதி; தியுமத்சேனன், மாளவி, சத்தியவதி, காலவன், குடிகள் முதலானோர் வருகிறார்கள்.

சத்—ஆஹா! என்ன ஆச்சர்யம்!—அண்ணு! நமஸ்காரம் அம்மா! நமஸ்காரம்.—மாமா வரவேண்டும்.—மாமி வாருங்கள்—குருசுவாமி, பணிகிறேன். (பாதத்தில் வீழ்ந்தெழுகிருன்.)

நா—கல்யாண்!

சா—குருசுவாமி, தங்கள் ஆசீர்வாதத்தால், தன்னியை ஆனேன். (நமஸ்கரிக்கிருள்)

நா—தீர்க்கசுமங்கலீபவ! எழுந்திருப்பாய் அம்மா.

சா—மாமா, நமஸ்காரம்—மாமி, நமஸ்காரம். அண்ணு—அம்மா பணிகிறேன் தம்மை.

தியு—அம்மா சாவித்திரி, நீ எங்களுக்கு மருமகளாக வாய்த்தது எங்கள் பூர்வபுண்ணியமே ஆகும்—அஸ்வபதி, உனக்குநான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன்!

அஸ்—எல்லாம், பிறகு பேசிக்கொள்வோம். வாருங்கள் நமது ராஜ்ஜியத்திற்கு. இவ்விடத்தில் என்ன இனி?

சத்—அண்ணு, நடந்த விஷயம் தெரிய வருமோ, தங்களுக்கு?

தியு—எல்லாம், நமது குருசுவாமி கூற அறிந்தேன்.—சுவாமி, தங்கள் அனுக்ரஹத்தால் அன்ருே அடியேன் இன்னும் உயிர் வாழ்ந்துள்ளேன். குருதேவா, தாமே சத்தியவந்தனே, இம்மண்பொறை தாங்குமாறு கட்டளையிடும்—

நா—அப்படியே—சத்தியவந்தா, காலவன் உன்னிடம் கூறிச்சென்றவாறு, கடகேதுவைக்கொன்று தன் சபதத்தை முடித்து விட்டான். இப்போது உன் நாட்டுக்

குடிகள் எல்லாம் வந்திருப்பது எதற்காக என்பதைத் தெரிந்து கொள். அவர்கள் எல்லோரும், உன் தந்தையை மீட்டும் தங்களுக்கு அரசனுய் வரவேண்டினர். உன்தந்தையோ, சிலநாள் ஓய்ந்து, தெய்வத் திருவருளுக்குப் பாத்திரமாகும் வண்ணம் சிவராஜ யோகம் செய்ய மனநாடியுள்ளார். ஆகவே, அவர் இஷ்டத்தின் படி, குடிகளின் வேண்டுகோளுக்கு இசைந்து, உங்கள் பழைய இராஜ்ஜியத்திற்கு நீயே அதிபதியாய் வாழ்வாயாக!

சத்—சுவாமி, ஆஞ்ஞையின்படி நடக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

நா—சந்தோஷம்!—சரி, தியுமத்சேன, அஸ்வபதி, வாருங்கள் போகலாம்.

சத்—காலவா, உன் பக்தியை மெச்சினேன்—கண்ணே, இவ்வளவும் உன்னுல் வந்தவையன்ருே?

சா—பிராணநாதா, எல்லாம் தமது அருளாகும்!

[எல்லோரும் போகிருர்கள்.]

மங்களம்.

## நாடகம் முற்றும்.

---

## இந்நாடகத்திற்கு உரிய கீர்த்தனைகள்.

1. பிலஹரிராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

செல்லல் ஆகுமோ நாதா என்னைத்
திகைக்க விட்டுமே.

சரணம்.

அல்லல் ஆகத் தனியளாகி அவனி
தன்னில் ஆருவேனே.
அன்பாயிங்குவாரும் வாரும்
ஆசையுள்ள நேசரே நீர் செல்

2. முகாரிராகம் - ரூபகதாளம்.

பல்லவி.

என்றனெண்ணம் இனிதாக என்தலையில்
எழுத்திலையோ.

அனுபல்லவி.

மன்னுமுயிர் களிப்புறவே மாநிலத்தில் மனமணந்த
மணாளன்தன்னை மாட்சிபெறமணந்துகொள்ளும் என்

சரணம்.

சுந்தரஞ்சேர்வடிவழகன்
சுகுணகுணமானதீரன்
சந்ததமும்மன்னர்புகழ்
சர்வலோகஉத்தமவீரன்
தன்னையானுமணந்துகொள்ளும். என்

3. காபிராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

நீயே மனதுக்கிசைந்தவள். என்-நெஞ்
சம்களித்திடவே இனியமொழிபுகன்ற-நீயேமனதுக்
கிசைந்தவள்.

சரணம்.

யாரேஉன்மனக்களிக்க அரியமொழிபகர்பவர்.
ஆசைகொண்டபாசமணம் நேசமாக
ஓசைகொண்டேன். நீயே

4. பைரவிராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

சுந்தரமான புருஷன்-சுகுணரஞ்சித. சுந்

அனுபல்லவி.

அந்தரதேவரும்வந்துபணிந்திடும். சுந்

சரணம்.

மந்தஹாசவதனன்முன்னம்
வந்தபெண்கள்கண்டவுடன்
தந்தமதியழிந்துதாவும்
சிந்தைகளிக்குமழகன். சுந்

5. கலியாணிராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

பாராய்என்றன் இனியசகிஇந்தப்படத்தையே

அனுபல்லவி.

சீராய் என்றன் மனதைக்கொள்ளை
தேடிநாடினதேவன்தானிவர்.

சரணம்.

எந்தப்படத்தில் இந்தவடிவந்துலங்கக்கண்டாய்
சொந்தமாக என்னைக்கொண்ட தூயன்படத்தின்
அழகைக்காண்பாய். பாராய்

6. சங்கராபரண ராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

அவதாரபுருஷன்-அகிலலோகம்பணியும். அவ

அனுபல்லவி.

தவம்பலசெய்மதன்தரணியிற்
பிறந்துமே-தரம்பெறவந்தநேர். அவதார

சரணம்.

அழிகினிற்குவமைசொல்
அருந்ததிமுதலான,
அப்பெண்மணிகளு
மனங்கொளமனங்கொளும் அவ

7. அடாணுராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

இதோ இதோ இருக்கிறுன் அவன்

அனுபல்லவி.

இன்னலுற நம்மை யெலாம் இந்தக்
காட்டில் அலைய வைத்தோன் இதோ

சரணம்.

சதா நமக்குத் துயர்
சமூக்கனிவன் உள்ளவரை
அதால் இவனைப்பற்றி ஹதாஹதம்
செய்திடலாம் இதோ

8. பியாகடைராகம் - ரூபகதாளம்.

பல்லவி.

குற்றமொன்றறியாது கொடுமொழி புகலுதல்
குவலயத் தடுக்குமோ தான்

அனுபல்லவி.

பற்றுகளை விட்ட பரமபுருஷர்கள்
பாரினில் பொறுமையே கடலினும்
பெரிதென்பர் பார்த்தறியாயோ நீ - குற்

சரணம்.

வீணாக என்னை நீ வெற்றுரையால் பழி
விளைக்கிறாய் கிளைக்கிறாய் மிகத்
துயராக்குறாய் வீணிது அல்லவோ
என்பகை வெல்லவோ வேறிது
பழிப்பது வேண்டிலேன் குற்

9. ராமஜீவ என்ற வர்ணமெட்டு.

இந்தவன சிங்காரம் என்
னென்றுரைப்பே னலங்காரம்
மூந்து கற்பகவன மொய்யழகெலா மொன்று
வந்து திரண்டதென்ன மகிதனில்வந்த இங்
பந்திபந்தியாக மலர்ச்செடிகளின்தன் பரப்பும்
பலவிதவர்ணமுடன் வாசவிதங்கொண்ட மலர்
விந்தையுங்காணக்காண வெயிலின் கொடுமைநீங்கிச்
சிந்தை தெளிவாகுதே தென்றலும் வீசுதே - இங்

10. காயகிராகம் - ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஏடி இது என்றனக்கு ஏற்காது சொல்லிவிட்டேன்
சற்று மதிப்பில்லாமனீ தாறுமாறாய்ப்பேசுகிறாய்
தந்தையிடம் சொல்லிடுவேன்
சந்திரிகா வேண்டாமினி ஏடி
அருமையாய்ப் பாராட்டும் அன்புடைய தோழிஎன
அகங்கொண்ட என்றனிடம்
ஆடுவதோ இவ்விதமாய் ஏடி

11. தோடிராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

பாரடி நீ பக்ஷமாகக் குயில்கூவப் பாந்த
செறிவினை விரித்தற்புதமாய் ஆடுமயிலை

அநுபல்லவி.

நேருடைய நந்தனத்தில் நேர்த்தியான பக்ஷிஜாலம்
நீண்டமரங்களிற்றாவி நெஞ்சங்களிக்கவே கூவிச்
சீருடைய என்மனத்தைத் தெளியச் செய்யும்
விந்தையுடன் பாரடி

சரணம்.

கண்டகண் விண்டிடாதபடி யழகுடன் கொண்டு
எண்டிசையும் வாசம்வீச இனியமலர்களை யுண்டு
காமன் ஆடும் காவே போல
பூமன்னாடும் பொழிலினில் பாரடி

[இவ்வுலகில் என்றபின் இந்தப்பாடல்]

12. முகாரிராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

நம்பினபேர்களை அன்புடன் ஆட்கொளும்
நாரணியே பரி பூரணியே

அநுபல்லவி.

வெம்பினா னழுகுரல் வித்தகி யுன்செவியில் வேறுகுதோ
அம்மா வினையாள் நான் என்செய்வேன் நம்

சரணம்.

எண்ணிய எண்ணங்கள் நின்னடியவர்கள் தாம்
இனிதினில் முற்றுற இன்பமாய் இருப்பாரே
ஏழை யேன்மாத்திரம் அதற்கெதிர்
ஏனோஎன் எம்மையே இம்மையே அருள்புரி நம்

13. எதுகுல காம்போதிராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

வடிவேலனை அடைவாய் மனமே மிடிதானற
மாயோகியர் பதநாடும் பரனும் வடி

அனுபல்லவி.

அடியவருள்ளத் தமர்ந்திடுவோனும் வடி

சரணம்.

கடியும் ஜனனம் கழிந்திட காடி
காதலாய்ஓடிக் கடுகவேஓடி வடி

14. சங்கராபரணராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

அழகிற்கிருப்பிடமோ - அரிவையிவள்

அனுபல்லவி.

பழந்தமிழ் வாணரும் பலபடப் புகழ்ந்திடும்
பாரவர்ணனைகள் சேரஇருக்குமிவள்—அழ

சரணம்.

மண்ணினில் மங்கை யென்றால்
மாதிவளே யாகும்-என்
புண்மனங் களிக்கவென்றால்
புகழ் மணம் கொள்ள வேண்டும்
எண்ணுதற்கரிய வனப்புடைய
இந்த மாதர் திலகத்தை—அழகிற்

15. பைரவிராகம் - ரூபகதாளம்.

பல்லவி.

எப்போது காண்பேனோன்-இனி என்
னுயிர்த் தலைவரை.

அனுபல்லவி.

இப்பூதலத்தினில் என் மனதைக் கொள்ளை
இன்புடன் கொண்டுமே பிரிந்து போமவரை—எப்

சரணம்.

கிடைத்தற்கரிய பொருள் கிடைக்கப்
பெற்றவளாயும்

கிஷோரின் தகைமைபோல் பிரியவே
விட்டுகொன்
வாடியே இருந்திட்டேன் மதியிதோ
எனக்கு
மங்கை துயரொழிய வாராரோ மீண்டுமே—எப்

16. எதுகுலகாம்போதிராகம் - தாளம்ரூபகம்.

பல்லவி.

என்ன மதிமருண்டேன்-என்ன காரியம்
செய்தேன்.

அனுபல்லவி.

அன்னமென வந்த என் அருங்குழந்தை சொல்லை
அவனியிற் கேட்டதால் அவலனுனுயினேன்—என்ன

சரணம்.

போயும் போயும் உண்ணப் போஜன மூமற்ற
போக்கில்லா ஒருவற்கோ புதல்வியைத் தந்திடப்
பொல்லா மனந்துணிவேன் புவியினி லென்
செய்வேன்—என்ன

17. கலியாணிராகம் - ரூபகதாளம்.

பல்லவி.

பரம கிருபாநிதியான பரம்பொருளே

அனுபல்லவி.

அரியயனரன் முதலமரர்கள் துதிபுரி
அமலனே விமலனே ஆதிமத்யாந்தனே—பரம

சரணம்.

பக்தவத்சலனே பாற்கடனுதனே
பகருந் திரிபுர தகன வினோதனே
துக்கசாகரந் தொலைத்திடு வேதனே
சூழுலகரணெனத் தோன்றிய நாதனே—பரம

18. தன்யாசிராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

ஏழையேன் படுதுய ரின்னதென் றறியீரா இன்னும்
வன்மமேனோ குருநாதா

அனுபல்லவி.

கோழை மனமுடையேன் குதூஹலமாயிடக்
கோமானே யருள்செய்ய வரவேயினும்வாதா
குவலயம் எலாந் துதி குருதேவா தமதடி
கூறுமுயர் துணையெனவே கொண்டிட்ட—ஏழை

சரணம்.

அருமைத் தவங்கிடந்து அழகு
பெண்ணைப் பெற்றேன்-அவ
ளும் கல்வி பெற்று அருங்குணம்
வரப்பெற்றுள்-தெரிவை எனினும்
என்சொல் நாடிக்கொளாள்
சுவாமி - தெரிய நான் என்செய்
வேன் தேவரீர் சொல்வீரே—ஏழை

19. அடாணராகம் ஆதிதாளம்.

பல்லவி.

நல்ல புருஷனையே நாடினாய்-நீ
நாட்டவர் தெளியவே தேடினாய்

அனுபல்லவி.

தொல்லுலகிலவன் போற் சுகுணசுந்
தரவடிவழகன் வேறொருவனுமில்லை—நல்ல

சரணம்.

தேசுடைமுகவிலாசன்தெய்வகுணர்நேசன்
சித்கணர்அடிவாசன்திவ்யவீரப்பிரதாபன்
நேசமாயுவனிடம்நீணிலத்திருப்பதே
நித்தியசுகமாகும்என்பதையறிந்தேநீ—நல்ல.

20. நவரோஜ்ராகம் - ரூபகதாளம்.

பல்லவி.

தலையிலெழுதியஎழுத்திதுவோஈசா
தரணியிற்பெண்ணாகவேஜனித்தபலனீதோ.

அனுபல்லவி.

அலையில்படுத்தவன்அளித்தவப்பிரமன்
ருன்-அநியாயம்என்னிடம்
செய்யவும்துணிந்தானே. தலை

சரணம்.

நான்மனதில்மணந்தநாதருயிரோராண்டில்
நமன்கையில்சிக்கிடவேநாளாச்சோஜயகோ
என்மங்கையாய்ப்பிறந்துஇக்கதியைஅடைதற்கு
இம்மனையில்வந்தேனே
நொந்தேனேமனமெல்லாம். தலை

21. கலியாணிராகம் - ரூபகதாளம்.

பல்லவி.

இதுவேசமயமம்மணி-ஏழைக்கருள்செய்ய

அனுபல்லவி.

பதுமமலரடிபற்றெனப்
பற்றினேன்-பாவியேன்துயர்
ஓய்வேபார்த்திடாய். இது

சரணம்.

ஆயிரங்குழந்தைகள்தம்முள்நானொருத்தியுன்
அடிமைக்குழந்தையன்றோ-அம்மா
சேயழுங்குரல்கேட்டுச்சேர்வள்தாய்
என்பதுசகமறிந்ததாற்சும்மா
மாயவிஇருந்திடாதென்மணாளனுயிர்
மண்ணினில்நிலைசெய்துமகிழ்ச்சி
செய்திடவே. இது

22. சக்கரவாளராகம் - ரூபகதாளம்.

பல்லவி.

ஆருயிர்தலைவரேயன்பாகவேஎனை அழைத்
தேகுவீர்.

அனுபல்லவி.

சீருடனேஉடன்நான்வரின்சிந்திப்
பேனேவனநடைத்துயர். ஆ

சரணம்.

தங்களுடன்இருக்கும்போது
தயக்கமேனேஎமைகொள்வேன்
வெங்கதிரோன்தண்கதிரை
விரைவிற்போக்கிமகிழ்ச்சிசெய்வான். ஆ

23. காம்போதிராகம் - ரூபகதாளம்

பல்லவி.

வருவதுதானே வந்துமேதீரும்வருந்து
தலென்னநீர்பாரும்.

அனுபல்லவி.

அருமறையுணர்ந்தஅறிவுடையநாதா
அவனியில்கலங்குதலாகுமோபோதா

சரணம்.

சகுணமுதலானசழக்கெனஎண்ணித்
தைர்யமேகொள்வீர்சாகரந்தானும்
சாகத்துணிந்தவர்க்கொருமுழமாகும்
ஏனேபின்னொருதுயர்நேருமென்றஞ்சி
இப்போதேநெஞ்சங்கலங்குதல்
வேண்டும். வரு

24. அதோஓடுது என்றவர்ணமெட்டு.

பல்லவி.

அதோநிற்கிருன்பார்-ஒருமனிதன்கரு
நிறமாய்ப்பெருங்கயிற்றைக்கரங்கொண்
டே-நிற்கிருன்பார்.

சரணம்.

என்னசெய்வேன் அவனை நான்
என்றன் கண்ணுல்பார்க்கும்போ
தேங்குதேகலங்குதேஹாஹா
ஹாஹாஹாஹா. அதோ

25. ஆகிரிராகம் ரூபகதாளம்.

கண்ணிகள்.

ஆவியிழந்தீரோபிராணநாதா
அரும்பாவியெனைவிட்டேபிராணநாதா. (1)
மஞ்சள்குங்குமமிழந்தேன்பிராணநாதா
மாங்கலவாழ்விழந்தேன்பிராணநாதா. (2)
சென்றவிடஞ்சொன்னுல்பிராணநாதா
சேர்வேனேஉம்மோடுபிராணநாதா. (3)
நாதனைப்பிரிந்தவர்பிராணநாதா
நங்கையராவரோபிராணநாதா. (4)
என்தலைவிதியோபிராணநாதா
இவ்வயதில்நலனிழத்தல்பிராணநாதா (5)
கண்ணற்றுனேஎமனும்பிராணநாதா
காரிகையான்கலங்கப்பிராணநாதா. (6)

26. முகாரிராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

அடிபணிந்தேனையா அருணிறைந்த துய்யா

அனுபல்லவி.

அடியாள்படுந்துயர நீக்கியருள் செய்ய
அன்பாய்க் கடைக்கணியும் அரும்பாவி உய்ய—அடி

சரணம்.

இந்தச்சிறுவதில் ஏழையாமும் மகள்
இந்தக்கதியடைந்தே ஏங்கப்பார்த்தல் நீது
சிந்தைசெய்தே நாதன் சிற்றுயிரைத் தாரும்
திவ்யமாக யானும் சிறப்புறவே பாரும்—அடி

27. கலியாணிராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

சரணமையா சஞ்சலமே மிஞ்சுகிறேன்

அனுபல்லவி.

சரணெனவே அடிபணிந்தேன் மிடிதணிந்தேயுற—சர

சரணம்.

சரணம் சரணம் சரணம் ஐயா
சர்வலோகம் போற்றும் மெய்யா
சார்ந்தவர்க் கின்னருள் செய் துய்யா
சமயமேழையைக் காத்தருவாயய்யா சர

28. அடாணராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

ஆஹா என்ன கேட்டனே வீணிலென்
அருந்தொழில் விழ விட்டினே

அனுபல்லவி.

தாரணிதனில் எவர்தருக்குடனெனைக் கண்டு
சாற்றிடாவிச் சொல்லைச் சாற்றியே உய்ந்தவர் ஆஹா

சரணம்.

தேவரும் கண்டாலெனைத்திடுக்கிடத் தியங்குவர்
தெரியாமலெனை யிவ்வாறுரைத்துமே சேர்ந்தனே

ஆவலாய்ச்சொன்ன சொல்லே
அவமதித்தாது மல்லால்
அடாத செய்கையைச் செய்ய
அலறியே அழுகிருய் ஆஹா

29. மோகனம் ராகம் - ரூபகதாளம்.

கோபம் வேண்டா மையனே இந்தக்
கொடியாள்தான் சுகம்பெறக் கண்பாரும்

சரணம்.

தாபமுடன் உமதடியினை நாடினேன்
சரணென அவற்றையே முடியினிற் சூடினேன்
சற்றுதாம் இரங்கிடில் சர்வானந்தந் தேடி
சந்தோஷமாகுவேன் நாதரையான்கூடி—கோப

30 இங்கிலீஷ் நோட் - ஏகதாளம்.

தனியே இருந்த தில்லே
சர்வேஸா அருளீசா தனி
அனியாயமாய் நான் இந்த
அருந்துய ரடைவதோ தனி
கண்பார்த் திரங்கு மையா
கவலேயில் ஆழ்ந்தேனன் தனி.

Chennai-600 008.
18552

Printed at K. R. Press, Madras.